www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 10.05 திருவள்ளுவர் ஆண்டு 2054

14.01.2023 - 13.02.2023

ISSN : 2195-6480



FREE Magazine

## திருமலையில் கொல்லப்பட்ட மாணவர்களுக்கு நீதி கிடைக்குமா...?

மக்கள் அரசியல்

எதிர் கட்சி அரசியல்

தமிழினத்தின் தயனிசியன்

# பிரபாகரன்

அகரம் 12 ஆண்டு



Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
TKS
BEST FOODS
Branded Masala
Canned Foods
Rice
Fresh Vegetables
Fresh Sea Foods
Green Vegetables
V BOX
149€
பெறுமதியுள்ள
119€*
கிடைக்கும்
மலிவும் தரமும் என்றும் உங்கள் TKS
Haldiram's
Aachi
The Mother of Good Taste
Elephant House
GRB
TRS
Tilda
Legendary Rice
Maliban
MTR
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de




ortel MOBILE

SMART WORLD +5 GB

## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to 20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***

ALLNET FLAT +5 GB

## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU

Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***

INTERNET FLAT +5 GB

## 11 GB Internet Flat


Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app (offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***




**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play · App Store

Aufladbar mit: ortel MOBILE, O2, e-plus

AKARAM
# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 மார்கழி 2022 - 13 தை 2023

சுவடி / ISSUE 10.05

**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu

ISSN 2195-6480

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் தமிழர் திருநாள் வாழ்த்துகளையும், தைப்பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவிப்பதில் நாம் பேருவகை அடைகின்றோம்.**

உண்மையில் எவ்வளவுதான் வாழ்த்தினாலும், கடந்த 75 வருடங்களாக மாறாத பீடையாக தமிழரின் அவல வாழ்வும், அதற்குப் பொறுப்பான அரசியல் தலைவர்களும், அவர்களது அரசியல் செயல்பாடுகள் அதாவது அப்படி ஏதாவது ஒன்றைச் சொல்ல முடியுமாயின், எதுவுமே இல்லாத அரசியல் வனாந்திரத்தில் வாக்களித்த மக்களைத் தவிக்க விட்ட சம்பவங்களே அதிகம்.

தமிழ் மக்களின் வரலாற்றுத் தாய் மண்ணையும், சிங்களத்தால் அபகரிக்கப் பட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களை ஒரு சிறிதும் அறியாத முட்டாள்களை ஈழத் தமிழினத்தின் தவைர்களாக வாக்களித்த குற்றத்தில் இருந்து தமிழ் மக்கள் தப்பிக்க முடியாது.

பிள்ளையார் என நினைத்துப் பிடித்து வைத்த தலைவர்கள் எல்லாம், குரங்குகளாக மாறி, அழகான மாலையாக அறிவான இனமாக மதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்கள், எல்லாம் பறிகொடுத்து, ஏதிலிகளாய் இலங்கை, இந்திய, அமெரிக்க, சீன ஆக்கிரமிப்பு அரசுகளால் எல்லா வளங்களும் அள்ளி, குருநாகல் போகும் நிலையைக் கூடத் தெரியாத குருடர் கூட்டத்தால், முடிவற்ற நரக வாழ்வில் தள்ளப்பட்ட நிலையில் நம் இனம் உள்ளது.



தென் மேற்கில் களனியா, வத்தளை, இராகமை நீர் கொழும்பு, குருநாகல், அநுராத புரம், பொலன்நறுவை, புத்தளம் தொடக்கம் கண்டி மாத்தளை, தென் கிழக்கில் மட்டக்களப்பு, திசமாரகம, கதிர்காமம் உள்ளிட்ட கும்புக்கண் ஆறு கடலில் கலக்கும் எல்லை வரை, தமிழரின் தாயகமாக இருந்தது.

1803 இல் பண்டார வன்னியன் தோற்கடிக்கப்பட்டு, கண்டி அரசை கைப்பற்றிய ஆங்கில அரசு, தமிழர்களின் தாய் நிலத்தை ஏற்கனவே கைப்பற்றி விட்ட சிங்கள அரசுகளுடன் இணைத்து, படிப்படியாக மாகாண எல்லைகள் சீரமைப்பு, சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழரின் பூர்வீகத் தாயகம் சிங்கள மயமாக்கப்பட்டது. இதற்கு கத்தோலிக்க கிருஸ்தவ மத மாற்றங்களும், சிங்கள அரசுகளின் குடிப் பரம்பல் மற்றும் தமிழ்ப் பாடசாலைகளைச் சிங்கள மயமாக்கி, தமிழரின் தாயகம் மற்றும் தமிழரின் அடையாளங்களை அழிக்க, எமது அரசியல் தலைவர்கள் தமக்குள் சண்டை போட்டார்களே அன்றி, தமிழ் மக்களின் நலன்கள் பற்றிப் பேசியதே இல்லை.

இவ்வளவு பெரிய நிலத்தைப் பறிகொடுத்த இனம், இப்பொழுது வடக்கு - கிழக்கு மாகாண சபை 13 ஆவது திருத்தச் சட்டம் எனப் பேசும் பொழுதும், திரிகோண மலை, மூதூர், வவுனியா, வன்னிப் பிரதேசங்கள், யாழ்ப்பாணம் என எங்கும் சிங்களமயமாகி விட்டதைக் கூடக் கவலைப்படாத கூட்டத்தை, ரணில் சுதந்திர தினமான பெப்ரவரி 4ந் திகதிக்கு முன்னர் தீர்ப்பதற்கு எங்கள் முட்டாள் தலைவர்களை பேச அழைத்திருக்கிறார்.

இவர்களும் இந்தியா வேண்டும், நோர்வே வேண்டும் என ஓடிக் கைவிட்ட மண் குதிரைகளை வேண்டும் என எல்லாக் கழுதைகளும் ஊளை இடுகின்றன. பண்டா செல்வா, டட்லி செல்வா, ஜே.ஆர்.சந்திரிகா, புலிகள் என மைசூர் திம்பு ஒஸ்லோ என எல்லா இடத்திலும் பேசிக் களைத்த பின்னர், இப்போ இலங்கைக்குள் பேசித் தீர்ப்போம். ஒரே நாளில் தீர்ப்போம் எல்லாப் பேச்சுக்களையும் வேடிக்கை பார்த்த ரணில்.

இப்போது அவரது தேவை கொள்ளை அடித்துப் பதுக்கிய அரசுப் பணங்களைப் பிடிபடாமல் பாதுகாப்பாக்குவது. கிடைத்தப் பதவியை யாரும் எடுத்து விடாமல், தானே ஆட்சி நடத்துவது, நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குச் சர்வதேச நாணய நிதியத்தில் கடன் உதவி பெற்று, தானே ஆட்சி அதிகாரத்தை வைத்துக் கொள்வது;

தேர்தலில் ஒரு தொகுதியில் கூட மக்களால் தெரிவு செய்யப்படாத ஒரு கட்சியின், ஒருத்தரின் ஆதரவும் இல்லாத நபரான ரணில் இத்தனை பேரையும் ஏமாற்றி, ஆட்சி செய்ய முடியும் என்றால், இவர்கள் எல்லாருமே உலக மகா அயோக்கியர்கள் என்பது உண்மை. எல்லோரது கவனத்தையும் உள்ளாட்சித் தேர்தல் அறிவிப்பின் மூலம், மிகப் பெரிய மடை மாற்றத்தை நாட்டில் கட்டவிழ்த்து விட்டுள்ளார். சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் இன வெறுப்பு அரசியல் மீண்டும் கொழுந்து விட்டெரிய களம் உருவாகும்.

தமிழரின் அரசியல் பிரச்சினை அல்ல ரணிலின் கவனம். இதை அறியாமல் எங்கள் அரசியல்வாதிகள் பலர் 8ஆம் வகுப்பைக் கூடத் தாண்டாதவர்கள் தமிழினத்தைக் காப்பாற்றுவார்கள் என நினைத்தால், அது எத்தகைய பெரிய முட்டாள் தனம்? கொஞ்சம் அறிவாளிகளான முன்னாள் நீதியரசரான விக்கினேஸ்வரனும், முதுமையாலும், உடல் நலக் குறைவாலும் பாதிக்கப்பட்டவர். கஜேந்திர குமார், பொன்னம்பலமும் இவருக்குப் பக்க பலமாக இல்லை. இப்படி பலமற்ற தமிழர் தலைமையால் எதுவும் கிடைக்காது. இந்தச் சுற்றில் பேச்சு நடந்தாலும் தமிழருக்கு மொட்டைதான்.

அரசியல் அறிவு சிறிதும் இல்லாத தமிழினம், இப்படியான முடிவைத்தான் அடைய முடியும். இப்படியான செய்தியைத்தான் நம்மாலும் சொல்ல முடியும். ஊர் கூடி இழுக்காத தேர், ஓர் அடியும் நகராது. இத்துடன் ஆற்றாமையுடன் விடை பெறும்,

**ஆசிரியர், அகரம் குழுமம்**

த. எதிர்மன்னசிங்கம்

# தமிழர்களுக்குத் தனித்துவமான 'அறகலய' இயக்கம் அவசியம்





தமிழரின் அரசியல் கட்சிகள் மீண்டும் தங்களின் கண்கட்டு வித்தைகளை காட்டத் தொடங்கி விட்டார்கள். சிங்கள மக்களால் விரட்டி அடிக்கப் பட்ட புரட்டல் மன்னன் ரணில் விக்கிர சிங்காவை, எப்படியோ நாட்டின் மக்கள் தலைவனாக ஆக்கப்பட்டு விட்டார். எந்தவித தார்மீக அறமும் இல்லாத, வெறும் சிங்கள மக்களின் வாக்கை பெற முடியாத பிச்சைக் காரனை. இலங்கை மக்களின் சார்பாக பிச்சை ஏந்தும் கோமாளியைக் கோலந்திக் கோட்டையில் கோலோச்சும் கோமானாக ஆக்கிய பெருமையில் எங்கள் தமிழ் தலைவர்களின் பங்களிப்பு மிகப் பெரியது.

தெரிந்தே உதவியவர்களைவிட, மறைமுகமாக உதவிய புல்லுருவிகள் மிக ஆபத்தானவர்கள் என்பதை, கடந்த 75 ஆண்டு சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றைத் தெரிந்தவர்கள் மறுக்க மாட்டார்கள். அத்தகைய புல்லுருவிகளின் கூடாரமாக விளங்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்கிற தமிழீழ விடுதலைப் புலிகளால் பெற்றெடுத்த கொலைகார அமைப்புகளும், இன்று முழுமையான சிங்களப் பௌத்த பேரினவாத அரசுகளின் கொத்தடிமைகளாகச் செயற்படுவதை, ஈழத் தமிழ் மக்கள் இனியாவது அடையாளம் கண்டு, தமிழர்களின் அரசியல் தலைமை என்கிற பொய் அடையாளத்தை அடியோடு புடுங்கி எறிய, சிங்கள மக்கள் செய்து காட்டிய 'அறகலய 'சொந்த ஊருக்கே ஓடு' போன்ற போராட்டத்தை நடத்தி, முற்றிலும் புதிய இளைஞரைக் கொண்ட தலைமையை உருவாக்க வேண்டிய அவசியத்தை 'அகரம்' மீண்டும் வலியுறுத்துகிறது.


முதலில் இவர்களின் அசையும், அசையாச் சொத்துகள் பற்றிய முழு விபரங்களும், தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கண்டறியப்பட்டு, முறையற்ற வழிகளில் சேர்க்கப்பட்ட சொத்துகள் யாவையும், நாட்டு மக்களின் சொத்தாக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தேர்தலின் பொழுது வெளிநாடுகளிடம் பெறப்பட்ட கட்சி நிதியாவும், அரச நிதியில் சேர்க்கப்பட வேண்டும்.

சிந்திக்கும் திறனற்ற நோயாளியாகி, மயக்க நிலையில் மரணித்த தந்தை செல்வாவுக்கும், இப்பொழுது உடல் இயக்கம் இழந்த நிலையில் உள்ள இரா.சம்பந்தனும், தமிழ் மக்களுக்குச் செய்து கொடுத்த அரசியல் நன்மை என்ன? எதற்காக இப்படி ஒரு கண் மூடித்தனமான அரசியல் கலாச்சாரத்தை நாம் மேற் கொள்ள வேண்டும்? இதனைத்தான் சென்ற இதழின் ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். இருந்த பேரிலும் துரோகத் தலைவர்களின் சிந்தனை? செயல்பாடுகளில் மாற்றம் எதுவும் காண முடியவில்லை.

"திருந்தாத இதயங்கள் இருந்தென்ன லாபம்?". தமிழர் தலைமை மாற்றப்பட வேண்டும். அதிலும் தகுதி வாய்ந்த தமிழ் பெண்கள் குழாம் எம் இனத்தின் அரசிலைப் பேசி வருகிறது. குறிப்பாகச் சிங்களத் தலைமையை ஏற்ற ஸ்ரீமாவோவும், சந்திரிகாவும் சிங்கள மக்களின் அரசியல், அது எத்தகைய தமிழருக்கு எதிரானதாகச் செயற்பட்ட போதிலும், பல சிங்கள ஆண்களின் தலைமையை விடவும் செயற்பட்டு வருகிற முன் மாதிரியைத் தமிழர்களும் பின்பற்றுவதன் மூலமே, 75 வருட காலத் தமிழரின் துயர வரலாற்றைக் கொண்ட செயலற்றுத் தமிழரின் பொற்கால வரலாற்றை, புழுதி மேடாக்கிய ஆண்களின் தலைமையை அகற்ற முடியும் என்ற நம்பிக்கையை அகரம் இதழ்களில் வலியுறுத்தி வந்துள்ளோம்.

எம் இனத்தை இலங்கை, இந்திய, அமெரிக்க மற்றும் பிராந்திய அரசுகளும் தமது இராணுவ வர்த்தக பொருண்மிய நலன்களுக்காக இலஞ்சம், ஊழல்வாதிகளாகிக் காட்டிக் கொடுத்தக் கூட்டத்தைக் குப்பை மேட்டில் வீச வேண்டிய தேவையை, அகரம் பல முறை வலியுறுத்தி வந்துள்ளது.

2009ல் புலிகளைத் தவிக்கவிட்டு, தமிழகத்தில் இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், காங்கிரஸ் தலைவர்களான சுதர்சனம் நாச்சியப்பன், கலைஞர் கருணாநிதி போன்றோரின் அரச விருந்தினராக, இந்திய



மத்திய அரசின் புலிகளுக்கும், ஈழத் தமிழின அழிப்புக்கும் ஆதரவாகச் செயற்பட்டவர்கள்தான் இந்தக் கூட்டணி. அதே சமயத்தில் புளொட், ஈ.பி.டி.பி,ரெலோ போன்ற மக்கள் விரோத அமைப்புகளுடன் இணைந்தும் செயற்பட்டனர்.

புலிகளை அழிக்கத் தானே காரணம் என்று, மகிந்தாவும் ரணிலும் உரிமை கொண்டாடிய பொழுதும், எங்கள் ஊமைத் தலைவர்கள் வாயே திறக்காமல் இருந்ததையும் கண்டோம். இந்திய அரசை எமக்கெதிராக செயற்பட வைப்பதற்காவே, சிங்களத் தலைவர்களான சந்திரிகாவும், ரணிலும், மகிந்தவும், அதான அம்பானி ஜெகத் ரட்சகன் போன்ற ஊழல்வாதிகளை எம்மண்ணில் முதலீடு செய்ய வைத்து, ஈழத் தமிழின அழிப்பை வெற்றி




பெற வைத்தனர். உண்மையான தமிழின பற்றாளர்களான குமார் பொன்னம்பலம், யோசப் பரராச சிங்கம், ரவிராஜ் போன்ற மற்றும் பலரின் கொலைகளிலும் இவர்களின் காட்டிக் கொடுப்பு அரசியல் இருந்துள்ளது.



2015ல் தமிழினப் படுகொலைகளின் பங்காளி அரசுகளால் உருவாக்கப்பட்ட ‘நல்லாட்சி அரசில்’ சம்பந்தனுக்குச் சன்மானமாக எதிர்க்க கட்சி தலைவர் பதவியும் வழங்கப் பட்டது. அதற்குச் சன்மானமாகத் தன் மானத்தையும் மறந்து, எதிர்க் கட்சி தலைவர் பதவி பெற்ற சம்பந்தன் தமிழரின் அரசியல் கைதிகள் விடுதலை பற்றிக் கவலைப்படாமல், ஐரோப்பிய ஒன்றியம் போர்க் குற்றங்கள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்ட மாளிகையும், இலங்கையின் ஆயத்த ஆடைகள் மீதான வரிச் சலுகைக்காகப் பல நாட்கள் பாராளுமன்றத்தில் பாடிப் புலம்பினார். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையோ, இன்றுவரை பண்டிகை நாட்களின் பரிசுப் பொதியாகவே ரணிலும் சொல்லி வருகிறார்.

தமிழ் அரசுக் கட்சி இன்று தனியார் கூடாரமாகி விட்டது. பேராசிரியர் சிற்றம்பலம், கடைசிவரை காட்சிப் பொம்மையாகவே இருந்து மறைந்தார். அவரது படிப்பறிவும், பட்டறிவும் படிப்பறிவற்ற கூட்டத்தால் யாருக்கும் பயனற்றுப் போய் விட்டது. கூலிக் கொலையாளிகள் மூலம் கொல்லப்பட்ட, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரின் பதவிகளைப் பின்கதவால் அபகரிக்கும் கூடாரமாக மக்களின் அரசியல் தலைமை மாற்றப்பட்டு விட்டது. மனம் உடைந்த நிலையில் இப்பொழுது வெளியேறப் போவது, கொழும்புக் கிளையின் தலைவர். ஆனால் சம்பந்தன், சுமந்திரன், மாவையாரை எந்தப் புயல், காற்று, மழை வந்தாலும் யாரும் ஒன்றும் செய்து விட முடியாது. இவர்கள் எங்கள் தலைவர்களாக உள்ளவரை மகிந்தவும், ரணிலும், கோட்ட பாயாக்களும், சிங்களத்தாலும் அசைக்க முடியாது.

அசைக்க முயன்ற ‘கோட்டா ஊருக்கே ஒடு’ என்ற மக்கள் புரட்சியின் தலைவர்கள் பலரின் தலைவிதி என்ன? என்பது கவலைதரும் விடயமாக உள்ளது. தமிழரால் சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது. ஆனால், தமிழர் தலைமைக்கு எதிராகத் தமிழர் போராடக் கிளம்பினால், சிங்களமும் புது வேகம் எடுத்து, மறுபடியும் எழும். அப்பொழுது ‘தமிழனுக்குச் சிங்களவன் எதிரி, சிங்களவனுக்குத் தமிழன் எதிரி’ என்கிற நிலை மாறி, முழுத் தேசமும் ஊழல், மது, போதை மருந்து, கடத்தல்காரர்களை நாட்டின் அரசியலில் இருந்து அகற்றப்படும் அதிசயத்தைக் காண முடியலாம்.

கொஞ்சம் மாத்தி யோசிப்போமா? உழவுக்குப் பயன்படாத மாடுகளைக் கசாப்புக் காரனுக்கு விற்கும் பொழுது, யாருக்கு என்ன கவலை? கண்ட விலைக்கே வித்தால் தண்டச் செலவும் மிச்சம்.






CHOLAN

**சோழன் பொருட்களின் விநியோகஸ்தகர்**

**DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாக பெற்றுக் கொள்ள நாடுங்கள்**

StaR-Impex







# Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

**அன்புச் செல்வன்**



# தனித் தமிழ் ஈழம் மலரும் தருணம் இது!

கடந்த 10 ஆண்டுகளாக 'ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?' என்கிற தொடரில் அகரம் மட்டும் தனித்த குரலில் பேசப் பட்ட நிலை மாறி, இன்று சர்வ தேச அளவில் ஈழத் தமிழ் மக்களின் தாயக மீட்பு பற்றிய விடயம் பரந்த அளவில் பேசு பொருளாக மாறி விட்டதைக் காண முடிகிறது. ஆனால், சிங்களத்தைப் பொறுத்த வரை தமிழரின் தாயக மண்மீதான எல்லாக் கேள்விகளும் மறுக்கப்பட்டும், இராணுவ அடக்கு முறை அரச சகல சட்டவாக்க சட்ட அமுலாக்கல் துறைகளின கட்டுப்பாட்டிலும் முற்றிலும் மறுக்கப்பட்ட நிலையே, 1930 ஆண்டு சட்டசபைத் தேர்தலைத் தமிழ் மக்களின் புறக்கணிப்பால் அனைத்து அமைச்சர்களும் சிங்களவராகக் கொண்ட, டொன் சேனாநாயக்கா அரசு, தமிழர் நிலங்களில் சிங்களக் காடையர்களைக் குடியமர்த்தி, தமிழின இன அழிப்பை தொடக்கி வைத்தும், இனவாத, பயங்கர வாத ஆட்சிகளை நடத்திய தலைவர்கள் இவர்கள்.

1947 தேர்தல் முடிவுகளில், மலையக இந்திய வம்சாவழிகளின் வாக்குப் பலத்தால் தமிழர்களின் பிரதி நிதிகள், சிங்கள இன மேலாதிக்கம் உடைந்ததைப் பொறுக்க முடியாத சிங்களப் பேரின வாத அரசியலை நடத்தி, நாட்டைப் பொருளாதாரப் படுகுழியில் சிங்களத்தோடு இணைந்து தள்ளியவர்கள் இவர்களே...

இன்றுள்ள அனைத்து இனப் பிரச்சனைகளுக்கும் மூல வேராக விளங்குவது சோல்பரி அரசுத் திட்டத்தின், சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பு விதிகளை மீறி, சிங்கள ஆட்சியாளர் தான்தோன்றித் தனமாக அரசமைப்புச் சட்டத்தை மீறிய, 1948 இலங்கை - இந்திய பிரஜாவுரிமைத் திருத்தச் சட்டத்தின் மூலம், இந்திய வம்சாவழி மலையகத் தமிழர்களின் குடி உரிமை வாக்குரிமைகளைப் பறித்து, நாடற்ற தமிழர்களாக்கித் தமிழினத்தை இரண்டாக கூறுபடுத்திய அந்தச் சட்டமே!. இந்தச் சட்டத்தை நிறைவேற்ற, நேரு தலைமையிலான இந்திய அரசு மிகப் பெரிய அழுத்தங்களைத் தமிழர் பிரதிநிதிகளிடம் கொடுத்தமையே!. இதை எல்லாம் மறந்த, மறைத்துவரும் எமது அரசியல் தலைவர்கள் இந்தியாவை வைத்து, இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சனைகளைத் தீர்வு காண வேண்டும் எனக் கூலிக்கு மாரடிக்கும் கும்பலாக அரசியல் பேசுகிறார்கள்.



ஓரளவேனும் சிறுபான்மை இன மக்களின் உரிமைகளுக்கு, பாதுகாப்பாக விளங்கிய அரசமைப்புச் சட்டத்தை மீறியமையானது சிங்கள ஆட்சியாளரின் மிகப் பெரும் சட்ட மீறல். அதனை சட்டப்படி எதிர்கொள்ள எமது தலைவர்கள் தவறியதால், நாடு இன்று பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. எனவே, இது போன்ற 1956இல் நிறை வேற்றப்பட்ட தனிச் சிங்கள மொழிச் சட்டம், பிரித்தானிய

குடியுரிமை பறிக்கப்படும்போது பாராளுமன்றத்தில் இருந்த மலையக மக்கள் பிரதிநிதிகள்




பிரபுக்கள் சபையால் வழங்கப்பட்ட தமிழ் அரசாங்க எழுது வினைஞர் சங்கம், மிகப் பெரும் செலவில் வழக்காடி பெற்ற, தமிழருக்குச் சார்பான தீர்ப்பைச் செல்லுபடியற்றதாக்க ஸ்ரீமாவோ 1972 இல் குமார சூரியர் எம்.சி. சுப்பிரமணியம் என்கிற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக்கி, தேர்தலில் தெரிவாகாமலே நியமன எம்.பி. பதவி வழங்கி, குறக்கு வழியில் சோல்பரி அரசமைப்பைச் செல்லுபடியற்தாகவும், பிரித்தானிய அரசின் தொடர்பைத் துண்டித்து, இனவெறி ஆட்சியைத் தொடர வசதியாக ஸ்ரீலங்கா சோஷலிசக் குடியரசு எனப் புதிய அரசமைப்பை மிகத் தந்திரமாகச் செய்து முடித்தார்.

8ஆம் வகுப்பைக் கூட படிக்காத ஸ்ரீ-மாவோ, பொன்னம்பலம், செல்வ நாயகம், திருச்செல்வம் போன்ற பிரபல வக்கீல்களைக் கொண்டிருந்த தமிழர்களின் அரசியல் தலைமை ஊமைகளாய், செவிடர்களாய் வாதம் செய்யாத சதைப் பிண்டங்களாக நடந்து கொண்டனர். தமிழரசுக் கட்சியின் கோமாளிகள் கூட்டத்தின் ஒருவரான ஈழ வேந்தன், தன்னிச்சையாக செல்வாவின் பதவி, பத்திரிகைச் செய்தி ஆக்கியதால் செல்வ நாயகம் பல வருடங்கள் பதவியும், பணமும் இல்லாமல் கொழும்புத் தெருக்களில் நடந்தும், பேருந்துகளில் பிறரின் கைத்தாங்களில் பயணித்தும், முடிவில் இடைத் தேர்தலை அரசு தரப்பு நடத்தியதால் மீண்டும் எம்.பி ஆனார்.

இப்படியான உதவாக்கரைகளைக் கொண்டுள்ள தமிழர் தரப்பு, இப்போது உலகப் பிச்சாண்டியாகி விட்ட ரணிலிடம், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு, கண்ட மரத்தடியில் காலைத் தூக்கி பேச்சு வார்த்தை நடத்தும் தெரு நாய்களின் தரத்தில், இந்தியா வேண்டும், இங்கிலாந்து, அமெரிக்கா வேண்டும் என உளறித் தள்ளுகிறார்கள்.

இவர்களுக்கு ரணில் யார்? தேவலோகத்து காமதேனுவா? நினைப்பதைக் கொடுக்கும் கற்பக மரமா? இத்தனை வருடங்களாக நாட்டுப் பிரச்சினையை ஆரிய சிங்கள பௌத்த சிந்தனையோடு மட்டுமே தொடர்புபடுத்தி, வடக்கு - கிழக்கில் தமிழர் நிலங்களில் 1,000 புத்த விகாரைகளைக் கட்டப் போவதாக, சென்ற தேர்தலில் பிரச்சரம் செய்தவர். அப்படி இருந்தும், அவரை எந்தச் சிங்கள மக்களும் நம்பி ஏற்கத் தயாராக இல்லாத செல்லாக் காசாக இருப்பவர். “என்ன வேணும்? என்று எல்லாரும் ஒரே குரலில் கேளுங்கோ. 1830 முதல் நடந்தவை எல்லாவற்றையும் மறந்துடுங்க” என்கிறார்.

இவர் முதலில் சிங்கள மக்களை என்ன கொடுக்கலாம்? என ஒரே குரலில் சொல்ல வையுங்க. அப்புறம் அதை நாம் ஏற்பதா? விடுவதா? என்கிற பதிலை நாம் ஒரே குரலில் சொல்லுவோம் எனத் தமிழர் தலைவர்கள் சொல்வார்களா? இப்போதைக்கு



*1972*இல் தமிழர் தலைமைகள் வட்டுக் கோட்டையில் எடுத்த அரசியல் பிரகடனத்தை, மைசூரில்,*1977*இல் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் வாக்களித்த, தனித் தமிழ் ஈழம் பற்றி திம்புவில், ஒஸ்லோவில் பேசப்பட்ட தீர்வுகளில் ஏதாவது ஒன்றை ரணில் தருவதாகச் சொல்லட்டும், தமிழர் தமது முடிவை ஒரே குரலில் சொல்ல முடியும் சுற்றியும் சுற்றை கொல்லையில் வெங்காயம் என்றால் என்ன? என்பதைக் காட்டி, ஏமாற்ற முடியாது. நமக்கு எத்தனையோ நாடுகளும், நாட்டாமைகளும் தமது வெங்காயத்தைக் காட்டி விட்டார்கள். இனித் தமிழர் நாம், எந்தக் கொம்பன் வந்தாலும் வெங்காயம் காட்டத் தயார்!.

அதனால் குட்டையைக் குளப்ப, தேர்தல் நடத்த பணம் ஏதும் இல்லாமல் உள்ளாட்சித் தேர்தலை நடத்துவாராம். அதற்கும் முன்னர் பிப்ரவரி சுதந்திர தின விழாவில், நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்து, உலக நிதி வழங்கும் நிறுவனங்களிடம் கடன் வாங்கி, கல்யாணம் நடத்துவாராம். எங்கள் அரசியல்வாதிகளின் உடம்பெல்லாம் தேனாக ரணிலால் ஏற்றுப் பேச முடியுமா?. இத்தனைக்கும் ரணில் எந்தத் தேசத்தின், எந்த மக்களின் ராஜாவாம்?. ஆலவட்டம் குடைக் கொடி பிடிக்கும் இந்தத் திருடர் கூட்டம் பதில் சொல்ல வேண்டும். கடந்த 70 வருடத்தில் இவர்கள் சேர்த்த சொத்துகளின் முழு விபரங்களையும், இவர்கள் பகிரங்கப் படுத்திய பின்னர், இவர்கள் ரணிலிடம் கேட்பதைக் கேட்டுப் பெறுவதைப் பெறட்டும்.

இத்தனை வருட காலமும் இவர்கள் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்ததே, எத்தனை பிறவி எடுத்து கால் செருப்பாக வாழ்ந்தாலும் நன்றிக் கடன் தீராது. கொழும்பிலிருந்து வெளியாகும் 'கொழும்பு 'ரெலிகிராஃப்' என்கிற ஆங்கில இணையத் தளத்தில் தமிழர் தொடர் கருத்துகள் கவனிக்கப்பட வேண்டியவையான கட்டுரைகளும் 'வாசகரின் கருத்துகளும்' உலகத் தமிழரால் கவனிக்கப் படுபவை.





இதில் பிரசுரமான கருத்துகள் கவனிக்கப் பட வேண்டியவை. அதனால் பின்வரும் கருத்துகளை ஆங்கிலம் தெரியாதவர்களுக்காக தமிழில் தருகிறோம்.

**டாக்டர் ஞான சங்கரலிங்கம் ஆகஸ்டு 28, 2020.**

வட இந்திய இனவாதிகளை தமிழருக்கு எதிராக ஆதரவை வழங்காமல், பிரச்சாரம் செய்வதற்காகவே மெலிந்த மொறகொடவை இந்தியாவின் இலங்கைத் தூதுவராக, குறிப்பாக தெரிவு செய்யப் பட்டுள்ளர். அண்மையில் அவர் 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக் கூறி உள்ளார் . அத்துடன் தமது ஆதர்ஷ நிறுவனமான விவேகானந்தர் சர்வ தேச நிறுவனத்தில் வட இந்திய சிந்தனையாளர்களை உள்ளடக்கிய 'பிராந்திய மற்றும் பூகோள சூழல்' பற்றிய இணைய விவாத அரங்கையும் ஒழுங்கு செய்திருந்தார். மெலிந்தவின் தொடர்புகள் மூலம் 13ஆவது திருத்தத்தைத் திருத்தவோ, கைவிடவோ செய்ய முடியும் என அரசு நினைக்கிறது. அதனால்தான் அவருக்கு சுதந்திரமாகச் செயற்பட அமைச்சரவை அதிகாரம் கொடுக்கப்பட உள்ளது. இது ஜே.ஆர். பண்டாரிக்குத் தமிழருக்கு எதிராகச் செயலாற்ற இலஞ்சமாகக் கொடுத்த வைர அட்டியலுக்குச் சமமானது.

***Dr. Gnana Sankaralingam / August 28, 2020***

***Milinda Moragoda has been handpicked as High Commissioner to India, in order to canvass among north Indian racists to sabotage any support to Tamils. Recently he expressed that 13th amendment be abolished. Also, he organised a webinar between his pathfinder foundation and Vivekananda international foundation comprising of north Indian think tanks on "Regional and geopolitical environment". Government hopes that through his contacts, Milinda will be able to convince north Indian racists to drop or modify without powers, the 13th amendment. That is why he is to be***



***given powers of cabinet minister to act with a free hand. It will be same as when Bandhari was bribed with diamond necklace by JR to act against Tamils.***

**கதம், ஆகஸ்டு 29, 2020**

இந்த ஒரு தடவை நான் உன்னுடன் இருக்கிறேன். எந்த வழியிலும் தமிழ் மக்களிடம் மோடிக்கு இடம் இல்லை. ஜெயலலிதாவை ஒழித்துக் கட்ட, அவர் என்ன செய்தார்? என்பதை நீங்கள் அறிவீர்கள். யாழ்ப்பாணத்தில் இருந்த பொழுது, மோடி வேண்டும் என்றே ஆங்கில மொழி பெயர்ப்பு இல்லாமல், இந்தியில் பேசினார். அவர் பேசியதை வட இந்தியரும், இராணுவத்தினரும் கரவொலி செய்து மகிழ்ந்தார்கள்.

***You know what he did to liquidate Jayalalitha. When in Jaffna Modi spoke in Hindi deliberately without English translation. Only north Indians and army personnel understood what he said. And they clapped!***

வேறொருவர் தேசிய முடிவுகளை எடுக்கும் பொழுது கெடு வாய்ப்பாக நீங்கள் அந்தத் தேசத்தின் குடிமகனாக இருந்தால் இப்படித்தான் நடக்கும். நீங்கள் கண்டிப்பாகக் கட்டுப்பட வேண்டும். இல்லை என்றால் அவர்கள் உங்களின் பின்னால் வருவார்கள். கவலைதான்!

***This is what happens when someone else makes national decision“è`õ£ŒŠð£è s and you unfortunately are a citizen of that nation. You must comply or they will come after you. Sad!***

***Dr. Gnana Sankaralingam / August 29, 2020***

**டாக்டர் ஞான சங்கரலிங்கம் ஆகஸ்டு 29, 2020.**

கதம், உங்களால் ஆழமாக ஆய்வு செய்ய முடியவில்லை. மோடி தன்னைப் பிறர் கவனிக்க வேண்டும் என விரும்பும் அரசியல்வாதி. இலங்கை தனது சப்பாத்துக் கால்களின் கீழே உள்ளது என்பதைக் காண்பிக்க யாழ்ப்பாணத்தில் 'இந்தியில்' பேசினார். அவர் தமிழில் பேசி இருந்தால், இந்தியாவில் உள்ள மக்கள் அதனைப் புரிந்து கொள்ள முடியாது. அந்தப் பேச்சும் வீணாகி விட்டிருக்கும். இந்தியாவின் வெளி உறவுக் கொள்கை, அவர்களின் அதிகாரிகளால் வகுக்கப்படுவது. பிரதம மந்திரிகளால் அல்ல. இந்திராகாந்தி போன்றவர்களால் மட்டும் அந்த அதிகாரிகளைக் கையாள முடியும். இந்தியாவிலும், இலங்கையிலும் நிலவும் பரிதாப நிலை என்ன வென்றால், வட இந்தியாவில் உள்ள இனவெறி ஊழல் அதிகாரிகளின் குருட்டுப் பார்வை, வெளி உறவுக் கொள்கை வகுக்கும் இனவெறி பிடித்த ஊழல் அதிகாரிகளால் ஆனவை.

தமிழர்களை வைத்து தமது அருவருப்பான வேலைகளைச் செய்ய முடியாது. இந்தியா இதே தவறை முன்னர் செய்து, பயன் பெற்றதும் கழட்டி விட்டது. முதலாவதாக அவர்கள் முன்னர் போல நம்ப மாட்டார்கள். இப்பொழுது அவர்களுக்கான ஊத்தை வேலைகளைச் செய்ய தமிழர்கள் வர மாட்டார்கள் என அறிவார்கள். இரண்டாவதாகத் தமிழ் மக்கள் 30 வருடப் போரினால் களைத்துப் போய் விட்டார்கள் என அவர்கள் வேறு வழியைத் தேடுகிறார்கள். எனவே, தமிழர் பிரச்சினை என்கிற துருப்புச் சீட்டை வைத்து, இலங்கையில் இலாபம் அடைய நினைக்கிறார்கள். தமிழரிடம் மோக்கான இடம் இல்லை, அதனால் தமிழ் மொழியைப் புகழ்ந்து பேசி வருகிறார்.


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


***Dr. Gnana Sankaralingam / August 29, 2020***
**(தொடர்ச்சி )2**

இந்தியா, சிங்களரை நம்பவில்லை. அதே நேரத்தில் அவர்களை சுரண்டாமல், எச்சரிக்கை கலந்த உறவை பேணுகிறது. இலங்கை, இந்தியாவை திருப்திப் படுத்தி, அதே நேரம் சீனாவுக்குச் சார்பாக செயற்படும் இரட்டை ஆட்டத்தை விளையாடுகிறது என்பதையும் அவர்கள் அறிவார்கள். கொழும்புத் துறைமுக கிழக்குப் பெட்டக முனையை, இந்தியாவுக்குக் கொடுப்பதை உறுதியற்றநிலைப் பாட்டில் உள்ளது. இந்தக் கட்டத்தில் திரு. விக்கினேஸ்வரனின் பின்னால், இந்திய அரசின் புலாய்வு அமைப்பு உள்ளதோ என்று சந்தேகப் படுகிறேன். தமிழரின் பூர்வீகம் பற்றிப் பேச்சின் எதிரொலியாக, சிங்கள இனவெறியர்கள் எதிர்ப்பைக் காட்டாமல், விஞ்ஞான ஆதாரங்களைப் பற்றிப் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் விவாதிப்பதை, நாங்கள் காண்கிறோம்.

1987இல் என்ன நடந்ததோ, இப்போ நடப்பவை வேறு. முன்னர் தமிழர்களுக்கான தனி நாடு, தனது நாட்டிலும் பிளவுகளை ஏற்படுத்தும் எனக் கருதிய இந்தியா, தனது புரிதலை மாற்றி, சீனாவை எதிர்கொள்ள தமிழருக்கான சுதந்திர அரசு, தனக்கான பாதுகாப்பு செல்வமாக கருதுகிறது. பாராளுமன்றத்தில் திரு விக்கினேஸ்வரன் பேசிய பேச்சின் பின்னர், அது உலகம் முழுவதும் பரவி, தமிழர்கள்தான் இலங்கையின் ஆதிக்குடிகள். சிங்களவர்களின் மாற்ற முடியாத, வேற்று மக்களை இனத்தையும் அங்கீகரித்து, மாறமறுக்கும் சிங்களவர்களின் கைகளில் கலாச்சார அழிவையும், இனப் படு கொலை சுத்திகரிப்பையும், அவர்களின் தாயகத்தில் சந்தித்து வருகிறார்கள். இந்தியா எல்லா விதமான தெரிவுகளையும் வைத்திருக்கிறது. 1987 போல முழுமையான இராணுவத் தலையீட்டை மறுத்தால், இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற, இந்தியா இராணுவத்தைப் பயன்படுத்த முற்பட்டாலும் ஆச்சரியம் இல்லை!.

சேதுராமலிங்கம்

"ஆராயாமல் வாழப்படும் வாழ்வு வாழ்வல்ல! பகுத்தறியும் வாழ்க்கையே வாழ்க்கை" என்று வாழ்ந்தவர் சாக்கரட்டீசு. இதை நடைமுறைப்படுத்தி வாழ்ந்தார், மற்றவர்களுக்குக் கற்பித்தார். அதனாலேயே அவர் இறைவனை அவமதித்தார் என்றும், இளைஞர்களைத் தவறாக வழி நடத்தினார் என்றும், அவருக்கு மரண தண்டனை வழங்கப் பட்டது. சாக்கரட்டீசின் தத்துவங்களுக்கு நவீன உலகை உருவாக்கியதில் மாபெரும் பங்கு உண்டு. அவரில்லாமல் இன்றைய நவீன உலகே தோன்றி இருக்குமா? என்பது சந்தேகமே!. இதெல்லாம் உண்மை என்றாலும், சாக்கரட்டீசு ஒரு மாபெரும் தவறைச் செய்திருக்கிறார். அவர் கிரேக்க நாகரீக வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமாக இருந்திருக்கிறார் என்று பெரிய குற்றச்சாட்டைச் சுமத்துகிறார் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த தத்துவமேதை நீட்சே.

அப்படி என்ன தவற்றைச் செய்தார்? இவ்வுலகில் ஏற்படும் அனைத்தையும் பகுத்தறிய முடியும் என்பது அவரது கொள்கை. எவையெல்லாம் பகுத்தறிவற்றது என்று நினைத்தாரோ, அவற்றை எல்லாம் எதிர்த்தார். அவரின் பிழை என்பது "தன்னால் பகுத்தறிய முடியவில்லை என்பதால், அது பகுத்தறிவற்றது" என்று நினைத்துதான். இந்தப் பிழையின் காரணமாக, அவர் சமூகத்தில் இருந்த பலவற்றை எதிர்த்தார், உடைத்தார்.



இவற்றை மேலும் நீட்சே இவ்வாறு விளக்குகிறார்.

இவ்வுலகை தயனிசியன் அப்பலோனியன் **(Dionysian, Apollonian)** என இரண்டாகப் பிரிக்கிறார் நீட்சே. அப்பலோனியன் என்பது பகுத்தறிவானது, சீரானது, ஒழுங்கானது; தயனிசியன் என்பது இதற்கு நேரெதிராக உணர்வுகளால் ஆனது, சீரற்றது, ஒழுங்கற்றது. இவ்விரு தன்மைகளும் இணைந்ததுதான் உலகம். சாகரட்டீசின் செயல் என்பது உலகின் ஒரு பாதியை நிராகரித்தது. குறிப்பாக அவரின் செயல் "அவல நாடகம்" **(Tragedy)** என்ற ஒரு கலையை அழித்தது. அக்கலை மக்களுக்கு தயனீசிய உலகை எதிர்கொள்ளும் உணர்வுகளையும், மனபலத்தையும், ஆற்றலையும் அளித்தது. சாக்கரட்டீசு மற்றும் அவரது நண்பர்களின் செயல்களால் தயனிசியன் அழிந்த பின்னர், அப்பலோனியனும் அழிந்தது. இரன்டும் சேர்ந்துதான் இருக்கமுடியும்; ஒன்று அழிந்தால், இன்னொன்றும் சேர்ந்தே அழியும். முடிவில் கிரேக்க நாகரீகம் தனது கலைகள், வீரம், கவிதைகள், பகுத்தறியும் திறன் என அனைத்தையும் இழந்தது, முடிவில் அழிந்தது. சாகரட்டீசின் பிழை என்பது "பகுத்தறிவின் ஊற்று என்பது பகுத்தறிவற்ற உணர்வில் இருக்கிறது" என்பதை அறியாமையே!.

## தமிழினத்தின் தயனிசியன்

# பிரபாகரன்

நமது சமூகமும் இதுபோன்ற சிக்கலில் மாட்டி இருக்கிறது. பகுத்தறிவுக் கொள்கைகள் முக்கியமானது, பல அநீதிகளை ஒழித்தது. ஆனால், அதனால் சமூகத்திற்குத் தேவையான தயனிசியப் பண்புகளை உருவாக்க முடியவில்லை. இன்று அதே பகுத்தறிவுக் கொள்கைகளே வீழ்ந்து கொண்டிருக்கின்றன. இன்றைய தேவை அப்பலோனியனும், தயனிசியனும் சேர்ந்த கலவை. அது பிரபாகரன் என்ற ஒற்றைப் பெயருக்குள் இருக்கிறது என்பதை, இக்கட்டுரையின் இறுதியில் வெளிப்படும். இக்கருத்தை நன்றாகப் புரிந்துகொள்ள மேலும் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

ஒரு சமூகத்தின் அரசியல் ஒழுங்கின் ***(Political Order)*** அடிப்படை எது? முதலில் ஆப்சின் **(Hobbes)** தத்துவத்தைப் பார்ப்போம். அரசியல் ஒழுங்கு இல்லாத பொழுது, மனிதர்கள் ஒருவர் பொருளை ஒருவர் அபகரிக்கின்றனர். அதனால் தனது பொருட்களைப் பாதுகாக்க ஒவ்வொரு மனிதனும், மற்றவர்களுடன் போரில் இருக்கிறான். வாழ்க்கை என்பது கொடூரமானதாகவும், சுருங்கியதாகவும் ***(Short and Brute)*** இருக்கிறது. இந்தப் போர் நிலையில் இருந்து தப்பிப்பதற்கு, மனிதர்கள் உருவாக்குவதுதான் அரசியல் ஒழுங்கு. அரசு என்பது சட்டங்களை வகுத்து, தனி மனிதர்களின் இடையேயான போர்களைத் தடுக்கிறது. அடிப்படையில் மனிதர்கள் தங்கள் சுய நலனைப் பாதுகாப்பதற்குப் பகுத்தறிந்து, உருவாக்குவதுதான் அரசியல். இதுதான் ஆப்சின் தத்துவம்.

ஆப்சின் தத்துவத்தில் ஒரு பெரும் சிக்கல் இருக்கிறது என்பது பல அறிஞர்களின் கருத்து. அது என்னவென்றால், நாடுகளுக்கிடையே போர்கள் ஏற்படுகின்றன. அவ்வாறான போரில் மனிதர்கள் தங்கள் உயிரையும் தியாகம் செய்யும் தேவை ஏற்படுகிறது. அரசியல் ஒழுங்கு என்பது, தனி மனிதர்களின் சுயநலனைப் பேணுவதற்கு என்றால், அவர்களை உயிர்த் தியாகம் செய்யச் சொல்வது முரணானது. எதைப் பாதுகாக்க அரசியல் ஒழுங்கு உருவானதோ, அதையே அழிக்க முடியாது. அதனால் அரசியல் ஒழுங்கு என்பது, சுயநலன் அடிப்படையில் சாத்தியமானது அல்ல. அவ்வாறான அரசியல் ஒழுங்கு எளிதாகப் பகைவர்களால் அழிக்கப்படும்.

திராவிடம் என்பது, ஆப்சின் தத்துவத்தின் அடிப்படையில் கட்டியமைக்கப் பட்டிருக்கிறது. இன்று திராவிடத் தலைமையிலிருந்து, சாதாரண மக்கள்வரை அவர்களை இயக்குவது சுயநலன். அவ்வாறு கடந்த 50+ ஆண்டு கால திராவிட அரசியல்




கட்டமைத்திருக்கிறது. ஒரு பேச்சுக்குத் திராவிடம் ஊழல், இலஞ்சம் என்று எந்த ஒரு தவறும் செய்யாத ஒரு புனித அரசியலை நடத்தி இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், திராவிடத்தில் ஒரு பெரிய சிக்கல் இருக்கிறது. அதனால் தமிழின உரிமைகளைக் காக்க முடியாது. வடக்குடன் மோத வேண்டுமென்றால், தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும். அதற்கு அரசியல் தலைவர்களும் தயார் இல்லை, மக்களும் தயார் இல்லை. ஏனெனில் ஆப்சின் சுயநலம் கொண்ட மக்களாலும், தலைவர்களாலும் அது முடியாத காரியம்.

உரூசோ **(Rousseau)** அரசியல் ஒழுங்கிற்கு மாற்று காரணங்களை வைக்கிறார். அரசியல் ஒழுங்கு என்பது, சுயநலன் அடிப்படையிலானது அல்ல. மாறாக சுயநலத்தைத் தாண்டி, பொது நன்மைக்கு உருவானது. அவ்வாறான அரசியல் ஒழுங்கை உருவாக்க ஒரு தலைவர் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும். சுயநல நோக்கில் இருக்கும் மனிதர்களின் குணங்களை மாற்றி, பொது அடையாளத்தில் இணைக்க வேண்டும். அந்தப் பொது அடையாளத்தில் இருந்து, ஒவ்வொரு மனிதனும் தனது சுயத்தை பெறுகிறான், உணர்கிறான். அடிப்படையில் தனிமனிதனை எடுத்து, புது மனிதானாக மாற்றி அமைப்பதுதான் அரசியல் ஒழுங்கை அமைக்க முனையும் தலைவரின் முக்கிய வேலை. இங்கு அரசியல் ஒழுங்கு என்பது இறப்பிற்கு அஞ்சி உருவானது அல்ல!. குழு நன்மைக்காக தனது உயிரையும் தியாகம் செய்வதற்குத் தயாராக இருப்பதற்காக உருவாக்கப்படுகிறது. மக்கள் பொது நன்மைக்காகத் தியாகம் செய்யத் தயாராக இருப்பர். 'நாம்' என்ற வலுவான அடையாளம் கட்டியமைக்கப்படுகிறது.

புலிகளின் தத்துவம் என்பது, உரூசோவின் அடிப்படையிலானது என்பது சொல்லாமலே விளங்கும். புலிகளின் அரசியல் ஒழுங்கு என்பது, சுயநலனை ஒழித்து, பொது அடையாளத்தை உருவாக்கி, தியாகத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது. தனக்கு எந்த நலனும் இல்லாமல், குடும்பத்தையே பலிகொடுக்கும் தியாக உள்ளம் என்பதை எந்தப் பகுத்தறிவாலும் விளக்கமுடியாது. அடிப்படையில் உரூசோவின் புலிகளின் தத்துவம் என்பது, தயனிசியப் பண்புகளை உள்வாங்கியது. ஆனால், ஆப்சின் தத்துவம் தனிமனித சுயநலனைக் கணக்கிடும் அப்பலோனிய பகுத்தறிவுப் பண்புகளை மட்டுமே கொண்டது.

எவ்வாறு அரசியல் ஒழுங்கிற்கு தயனிசியன் பண்புகள் அடிப்படைத் தேவையானது? என பார்த்தோம், இனி அறிவியலுக்கு வருவோம். ஆடம் சுமித்து **(Adam Smith)** நவீன பொருளாதாரத்திற்கானக் கருத்தியலை வழங்கியவராக அறியப்படுகிறார். ஆனால், அவர் பலதுறைகளில் ஆக்கங்களைப் படைத்தவர். அவர் அளித்த இன்னொரு முக்கிய பங்களிப்பு அறிவுப் புரட்சிக்கான காரணங்கள் என்ன? என்பது. அவர் தோன்றிய காலத்தில் காட்லாந்தில் **(Scotland)** எண்ணற்ற அறிஞர் பெருமக்கள் தோன்றி, பல்வேறு துறைகளில் அறிவுசார் படைப்புகளை உருவாக்கினர். அதனால் 18 ஆம் நூற்றாண்டு என்பது, காட்லாந்தின் அறிவொளிக் காலம் **(Scottish Enlightenment)** என அறியப்படுகிறது. எது இத்தனை சிந்தனையாளர்களைத் தூண்டி இயக்குகிறது? என ஆராய்கிறார். அவரின் கருத்துகளை, மற்றவர்களின் கருத்துகளுடன் இணைத்துச் சுருக்கமாகத் தருகிறேன்.

சிந்தனைக்குப் பகுத்தறிவுதான் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. ஆனால், இது தவறான பார்வை. சிந்தனை என்பது பகுத்தறியும் முறை என்றாலும், அவர்களை அவ்வாறு சிந்திக்கத் தூண்டுவது பகுத்தறிவல்ல, மாறாக அவர்களது உணர்வுகளே.! பகுத்தறிவு உணர்வுகளுக்கு அடிமை என்பது, டேவிடு கியூமின் **(David Hume)** வாதம். இது இன்றைய நவீன அறிவியலிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று (அந்தோனியோ தமாசியோ - **Antonio Damasio).** நாம் சில சிக்கல்களைக் காணும்பொழுது, அது நமது எண்ணத்தில் வியப்பை அல்லது கிளர்ச்சியை உருவாக்குகிறது. இந்த உணர்வுகள்தான் நம்மை ஆராய வைக்கிறது. ஒருவர் எவ்வளவு பெரிய பகுத்தறியும் திறன் கொண்டவராக இருந்தாலும், அவருக்கு உணர்வுகள் இல்லையென்றால், அந்தப் பகுத்தறிவினால் எந்தப் பெரிய பயனும் இல்லை.

**(தொடரும்)**


மாபெரும்
ராஜ
முத்திரை
வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
21ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648



மாதவன்

# ரணிலின் தீர்வு இதுவா?

பிப்ரவரி 4ந் திகதி இலங்கையின் 77வது சுதந்திர தினப் பரிசாக இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என, எந்த வகையிலும் சட்டப்படியான முறையில் இலங்கையின் ஜனாதிபதியாக்கப் பட்ட மக்களின் அறகல போராட்டத்தால் விரட்டப்பட்ட பா.உ. க்களால் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட, அதிபராக பதவி வகிக்கும் ரணில் விக்கிரம சிங்க, தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

70 வருடங்களாக தமிழ் மக்களால் அரசியல் அறவழி ஆயுதப் போராட்டங்களால் தீர்க்கப்படாமால் தமிழர் நிலங்களையும், தமிழ் மக்களையும் இராணுவ ஆயுத அடக்கு முறை ஆட்சி நடத்தும் இவர், திடீர் தீர்வை வழங்க அழைக்கிறார் என்றால், நரி - கொக்கு விருந்து போன்ற ஏமாற்று வித்தை காட்ட முனைகிறார் என்பதாகத்தானே இருக்க முடியும்?

முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்தி, தனது பதவியைச் சட்டப்படி உறுதிப் படுத்த வேண்டும். அறகலய மக்கள் புரட்சியில் வீட்டுக்குப் போக வேண்டியவர்கள் பட்டியலில் இவர் பெயரும் இருந்தது. ஆனால், தந்திரமாகத் தப்பித்த இந்த நரி, மகிந்த கோட்டபாயா, இராஜபக்ஷேக்களின் பா.உ.களின் ஆதரவைப் பெற்று, தற்காலிகமாக அதிபர் பதவியை எடுத்து, அவர்களை நாட்டை விட்டே விரட்டிவிட்டு, குறுக்கு வழியில் பெற்ற பதவியையும், அதிகாரங்களையும் பயன்படுத்தி அசல் ஜனாதிபதியாக உலகுக்கு காட்டவும், அரசியல் அடிமைகளாக கடந்த 75 வருடங்களாக அரசியல் செய்யும் தமிழ் அரசியல் கட்சிகளையும், சந்தர்ப்பவாத தனி நபர்களையும் பயன்படுத்தி, தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் பயக்காதத் தீர்வைத் திணிக்கத் திட்டத்துடன் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

தைப் பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம் சென்று, அங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச முயன்று, தமிழ் மக்களின் எதிர்ப்பை அடக்க அரச படைகள் நீர்த்தாரை தாக்குதலைச் செய்து, அவரது நோக்கம் நிறைவேறாமல் போனது. அவர் இப்பொழுது மறைத்து வைத்திருப்பது கோட்ட பாயா ஜீ.எல் பீரிஸ் ஒக்டோபர் 2021 தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பு எனத் தெரிய வருகிறது. அடுத்தவனுக்கு ஆப்பும்,



ஆட்டையும் அடிக்கும் திறன் படைத்த ரணிலுக்கு இது ஒரு சிறந்த தருணம்.

அந்த அரசமைப்புச் சட்டம் பற்றி சிங்கள சட்ட வல்லுநரான பசில் பர்ணாந்து ஒக்டோபர் 2021இல் இப்படி கொழும்பு ரெலிகிராஃப் இணையத்தளக் கட்டுரையில் எச்சரிக்கை செய்திருந்தார். இராஜபக்ஷேக்கள் செய்யத் தவறியதை ரணில் தமிழ் மக்கள் தலையில் கட்டிவிட்டு தன்னையும், பதவியையும் காப்பாற்றி விடலாம் என எல்லாக் கட்சிகளையும் பேச்சுக்கு பிப்ரவரி 4ந்திகதி அழைத்து நாட்டையும், மக்களையும் மோத வைத்து கிடைத்தப் பதவிக்கு கால அவகாசம் தேடுகிறார்.

இதோ பசில் பர்ணாந்து விடுத்த எச்சரிக்கை:

'பேரா.ஜீ.எல்.பீரிஸ் புதிய அரசமைப்பு'ச் சட்ட வரைவு முடிந்து விட்டது என அறிவித்து விட்டார். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி உரையில் ஜனாதிபதி கோட்டபாயா ராஜபக்ஷ புதிய அரசமைப்பு வருகின்ற ஆண்டு ஜனவரியில் புதிய அரசமைப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனக் கூறியுள்ளார். இந்தச் செய்தி தங்கள் உயிரைப் பற்றியும், அவர்களின் அரசமைப்புச் சட்ட உரிமைகள் பற்றியும் கவலைப்படும் எல்லா மக்களையும் அதிர்ச்சி அடைய வைக்கும் என்பதில் ஐயமில்லை. இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தின்படி, மக்கள்தான் இறையாண்மை உள்ளவர்கள். இறையாண்மை கொண்ட மக்களால் மட்டும் தமக்கான அரசமைப்பை ஏற்படுத்தும் உரிமை கொண்டவர்கள். ஏற்கனவே 2 தடவைகள் மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள்.

முதலில் 1972ல் பிரகடனப் படுத்தப்பட்ட அரசமைப்பில், அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக நாட்டில் உள்ள தனியார் மற்றும் பொது நிறுவனங்களின் சுதந்திரம் பறிக்கப் பட்டது. அதே சமையத்தில் நீத்துறையின் சுதந்திரமும் பறிக்கப் பட்டது. 2வது மிக மோசமான அரசமைப்பு 1978இல் அமுலாக்கப் பட்டது. இந்த




அரசமைப்பை அநேகமாக எல்லாராலும் முக்கியமான அரசியல்வாதிகளாலும் கண்டிக்கப்பட்டது. ஆனாலும், அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டு மக்களின் கழுத்தை இறுக்கும் சுருக்கு கயிறாக செயற்படுகின்றன. இன்று உள்ள எல்லா அழிவுகளுக்கும் இந்த 2 அரசமைப்புச் சட்டங்களே காரணம். இந்த தற்போதைய நாட்டின் நிலை, மக்கள் தங்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்த தக்க தருணத்தைத் தந்துள்ளது.

பசில் பர்னாந்து அறிவிக்கையில் வரையும் வேலைகள் முடிந்து விட்டன. வருகிற ஜனவரியில் பாராளுமன்றத்தில் வெளியாகும் தயார் நிலையில் உள்ளது என்றார். ஜனாதிபதி கோட்டபாயா ராஜபக்ஷவும் வரும் வருடத்தில் வெளியாகும் என தொலைக்காட்சி உரையில் குறிப்பிட்டிருந்தார். இவைதமது உயிரைப் பற்றிக் கவலைப்படும் எல்லா மக்களையும் அச்சுறுத்தும் செய்திகளாகும். இலங்கை அரசமைப்பின் படி எல்லா மக்களுக்கும் தன்னாதிக்க உரிமை கொண்டவர்கள். அத்தகைய தன்னாதிக்க உரிமை கொண்ட மக்கள்தான் தமக்கான தன்னாதிக்க அரசமைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்ஸும் இந்த அரசாங்கமும் எடுத்திருக்கும் முற்றிலுமாக சிறப்பு அரசமைப்பு விதிகளை மீறி மக்களின் தன்னாதிக்க உரிமை பற்றிய கருத்தை மீறுவதாக உள்ளது. பேராசிரியர் பிறிஸினால் கருதப்படும் செயற்பாடுகள் மிகப் பெரும்அழிவுகளை ஸ்ரீலங்கா தேசத்தில் ஏறபடுத்த வல்லன. வருங்காலத்தில் நாட்டின் மக்களின் பொதுப் பொருளாதாரக் கட்டமைப்புகளையும் சமுதாய கட்டுக் கோப்பையும் சிதைக்கக் கூடியவை.இந்த அரசமைப்பு இந்தத் தலைமுறையை மட்டும் அன்றி வருங்காலத் தலைமுறையையும் மிகப் பெரிய அளவில் கேடுகளால் வரும்காலச் சந்ததியையும் பாதிக்கக் கூடியவை. பேசப்படும் செயல் திட்டங்கள் அரசமைப்புச் சட்டவாக்க முறைகளை முற்றிலுமாக மீறுவதாலும் மக்களின் இறையாண்மை பற்றிய கருத்துக்களை மழுங்கடிக்கும் செயல்களாகும்.

அதன் பின் விளைவுகள் இலங்கைக்கு மிகப் பெரும் அழிவையும் அரச நிறுவனங்கள் பொது நிறுவனங்கள் பொது நிதி நிறுவனங்கள் உட்பட நாட்டின் எல்லா சமூக அமைப்புகளையும் மக்களின் இறையாண்மையும் வருங்காலச் சந்ததிகளையும் நிர்மூலப்படுத்தி விடும். ஏற்கனவே மக்கள் இந்த முயற்சியில் தலையிட்டுத் தடுக்க வேண்டும்.






Kings
Niru BRAND
LEELA
Suryaa
LION
Maliban Inspiring Goodness
Double Horse
Tilda

# IMPORTAS

*International Foods & Beverages*

www.importas.ch
info@importas.ch

**மொத்த விற்பனை நிலையம்**

Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38, Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

TRS
Aachi
Maggi
PG tips
Rubicon
ELAKKIA
OKF

கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ.. மிடுக்கன் சரக்கு இருக்க விலைப்படும் எண்ட கணக்கில மருந்துக் கடைக்காரன்தான் இப்ப இருந்த இடத்தில பணக்காரன் ஆகுறான். அந்தளவுக்கு மனுசருக்கு வியாதிகள் கூடிப்போச்சு. அதவிட மனநிலை குழம்பின மனுசரும் இந்த உலகத்தில கூடிபோச்சினம் கண்டியளோ..**

உவன் என்னடா பிசத்துறான், இவனுக்கு தான் மனநிலை குளம்பீற்றுதோ எண்டு நீங்கள் நினைக்குறது எனக்கு விளங்குது பாருங்கோ. ஆனாலும் என்னவிட மோசமான பித்தலாட்டங்கள் எல்லாம் இந்த உலகத்தில இருக்குது எண்டு உங்களுக்கு தெரிஞ்சால், நான் புத்தி பிசகாத ஆள் எண்டு உங்களுக்கு விளங்கும்.

ஈழத்தமிழனை அடிச்சு ஊர்ஊரா கலைச்சு விட்டாலும் சொந்தப் புத்தி ஒருநாளும் விட்டுப்போகாது எண்டதுக்கு எங்கடை ஆக்களே நல்ல உதாரணமா வெளிநாடுகளில இருக்கினம் எண்டா உங்களால நம்ப முடியுதோ. சாப்பிட வழி இருக்கோ இல்லையோ ஆனால் மற்றவனை பாத்து சாத்துவாய் ஊத்தி அவனுக்கு கும்பிடுபோடுறதுக்கு எங்கடை ஆக்களை விட்டால் உலகத்தில ஆரும் இல்லை கண்டியளோ. தமிழ் இனத்தின்ர விடுதலைக்காக தங்கட இளமைக்கால கனவுகளை மறந்து உயிரை குடுத்தவங்கள் பிறந்த அதே மண்ணிலே தான் இப்படியான சாத்துவாய் கூட்டமும் இருந்திருக்குது எண்டு நினைச்சால் வயித்தை பத்தி எரியுது பாருங்கோ.

வாழ்க்கையில பொழுதுபோக்கு எண்டுறது எல்லாருக்கும் தேவை தான் பாருங்கோ. ஆனால் வாழ்க்கையையே பொழுதுபோக்கா நினைச்சு கூத்தும் கும்மாளமுமா இருக்குற தமிழ்க் கூட்டங்களை நினைச்சால் பச்சை மட்டையால வெளுத்தாலும் கோவம் தீராது பாருங்கோ. படிப்பில முன்னுக்கு வந்தால் இனத்துக்கு எதாவது செய்யலாம், அறிவில உயர்ந்திருந்தால் இளம் சமுதாயத்துக்கு வழி காட்டலாம், கலையில உயர்ந்திருந்தால் இனதின்ர பண்பாட்டை வெளிப்படுத்தலாம். ஆனால் கோடிகோடியா சம்பளம் வாங்கி ஊர்உலகமெல்லாம் பதுக்கி வச்சுக்கொண்டு திரியுற கூத்தாடிக்கு வால்பிடிச்சு

வாழ்க்கையில என்ன முன்னேற்றத்த இந்த இனம் காணப்போகுது எண்டு விளங்கேலை பாருங்கோ.

அந்தக் காலத்தில எல்லாம் வீதியளில நடந்த தெருக்கூத்து நாடகங்கள் எல்லாம் ஏதாவது ஒரு நல்ல கருத்து விதைக்கப் பட்டிருக்கும் அல்லது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுற கருத்துக்களாவது இருக்கும். ஆனால் அரைகுறை உடுப்போட நாலு குத்துப் பாட்டுக்கு ஆடி, நம்பமுடியாத மாதிரி நாநூறு பேரை அடிச்சு துவைச்சு பொய் பித்தலாட்டத்தை திரைப்படம் எண்ட பெயரில வியாபாரத்துக்காக பணமுதலைகள் தயாரிச்சு விட, அத படமா பாக்காமல் வாழ்க்கைக்குரிய பாடம் மாதிரி அடிபட்டு புடுங்குப்பட்டு போய் காசு கட்டி பாக்குறதுகளை என்ன பெயர் வச்சு கூப்பிடுறது எண்டு தெரியேல்லை.

இப்ப கிட்டடியா பாருங்கோ ஒரு பெருங் கூத்தாடியின்ர உருட்டு பிரட்டுக்கு திரைப்படம் எண்டு பெயர் வச்சு வெளியிட்டாங்கள். அந்த படத்துக்கு விலை அதிகமா குடுத்து போனது மட்டுமில்லாமல், திரையரங்க வாசலில கூத்தாடியின்ர ஆளுயர படம் வச்சு அதுக்கு கற்பூர தீபம் காட்டி அதுக்கு மாலையிட்டு பொங்கிப் படைச்சு கேவலங்கெட்ட வேலையை செய்த எல்லாரும் ஈழத்தமிழர்கள்தான் எண்டால் நம்புவியளே.

ஊர் உலகத்தில எத்தனையோ தமிழ்ச்சனம் சாப்பிட வழியில்லாமல், படிக்க வழியில்லாமல் கஷ்ரப்படுறது கண்ணுக்கு தெரிஞ்சாலும் அதையெல்லாம் கணக்கில எடுக்காத இந்தக்கூட்டம், ஊர்பெயர் தெரியாத ஒரு கூத்தாடியுக்கு தீபம் ஏத்தி கும்பிடுது எண்டால்.. இதுகளை தமிழினத்தில பிறந்ததுகள் எண்டு சொல்லலாமோ பாருங்கோ.

அதிலயும் பாருங்கோ சிலபேர் கூத்தாடியுக்கு கும்பிடு போடுற இடத்தில நிண்டு தமிழினத்துக்காக போராடி விதையா விழுந்தவங்களிண்ட ரத்தத்தில உருவான




தேசியக்கொடிய கொண்டுபோய் சம்பளத்துக்கு கூத்தாடுறவநின்ற படத்துக்கு முன்னால நிண்டு ஆட்டிக் கொண்டு நிண்டவே எண்டால், உவையெல்லாம் எந்த வகையில சேர்கிறதெண்டு நீங்களே சொல்லுங்கோ.

தாங்கள் பிறந்த இனத்தின்ர மதிப்பும் தெரியாமல், அந்த இனத்தின் மாண்பும் தெரியாமல் கூத்தாடிக்கு கொடி பிடிக்கிற கூட்டமாக எங்கட இனம் மாறிப்போய் நிக்கிறதை கண்டால் என்ன செய்யிற எண்டு விளங்கேல்லை பாருங்கோ. உதுக்கு நல்ல மருந்து என்னவெண்டால் பாருங்கோ ஊருக்கு போய் நல்ல கருக்கு மட்டையள் தேடி வெட்டி மூண்டு நாலு நாளைக்கு தண்ணியில ஊறப்போட்டு நல்லா பதப்படுத்தி கொண்டுவந்து வைக்க வேணும். இந்த கூத்தாடிகளின்ர படம் வரேக்க ஒரு முப்பது நாப்பது முரட்டு ஆசாமிகளை சம்பளத்துக்கு பிடிச்சு இந்த பதபடித்தின மட்டையள கையில குடுத்து படம் பாக்குற மாதிரி கூடத்தோடகூட்டமா திரையரங்குக்குள்ள அனுப்பி விடவேணும். திரையில கூத்தாடியினர கூத்து தொடங்கின பிறகு கதவை இறுக்கி மூடிப் போட்டு கதரக்கதர கருக்கு மட்டையாள முதுகுத் தோல உரிக்க வேணும். ஒரு நாப்பது அம்பது பேருக்கு முதுகுத்தோல உரிச்சு விட எந்த கூத்தாடியினர படம் வந்தாலும், இந்த விளக்கு கொடி பிடிக்குற வேலைகளெல்லாம் தானா அடங்கும்.

பொழுதுபோக்கு எண்டுறது மனுசனுக்கு முக்கியம்தான் பாருங்கோ. அதுக்காக திரைக் கூத்தாடிகளையெல்லாம் தெய்வமா மதிக்கோணும் எண்டு யாரும் சொல்லேல்லை. அவன் சம்பளத்தை வாங்கி நடிச்சிட்டு போடுவான், ஆனால் இவங்களோ அவனை ஏதோ அசகாயசூரன் எண்டு நினைச்சு தலையில தூக்கி வச்சி கூத்தாடுறாங்கள். உது உப்புடியே போச்சு தெண்டால் இந்த இனத்தை எந்த இனமும் மதிக்காது.

“கண்ணை கட்டிக் கொள்ளாதே
கண்டதை எல்லாம் நம்பாதே
காக்கைக் குயிலாய் மாறாதே தோழா”

**- அப்ப வரட்டே**




BOX
ONE MONTH FREE
TALK TIME TO 132
COUNTRIES, INCLUDING
INDIA AND SRILANKA,
FOR EVER
V BOX PURCHSED
IN GERMANY.
SUPER
SALE
IN GERMANY
119 €
CALL ONLY
+49 1514 6978484
BIGG BOSS
6

இலட்சுமணன்



# தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை சாத்தியம்?

இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வேட்பு மனுத்தாக்கல் அறிவிக்கப்பட்டாயிற்று. ஆரம்பம் முதலே பழைய முறையிலா அல்லது எல்லை நிர்ணயம் முடிந்த பின்னர், புதிய முறையிலா என்றிருந்த நிலையில், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்ற பழைய முறையிலேயே தேர்தல் நடைபெறவிருக்கிறது என்பது உறுதியாகி விட்டது. வேட்புமனுக் கோரப்பட்டிருக்கிறது. தேர்தல் செயலகத்தின் தீவிர வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்றாலும், இந்தத் தேர்தல் குறிப்பிட்ட காலத்துக்குள் நடைபெறுமா? என்ற சந்தேகம் இன்னும் தீரவில்லை என்பது மாத்திரம் நிச்சயம். இன்னமும் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப் படாமையினாலேயே இந்த சந்தேகம். இருந்தாலும், தேர்தல் வந்துவிட்டாலே அரசியல் அலையொன்று அடித்து அனைத்தையும் அள்ளிக் கொண்டு போய்விடும். அதில் மக்களின் எண்ணங்கள், அவர்களின் ஜனநாயகம், அரசியல் எதிர்பார்ப்பு எனப் பல அடக்கம். அதனை விடவும் முக்கியமான விடயங்களும் நடைபெற்று விடுகின்றன.

தமிழர்களின் அரசியல் மாத்திரம் இதற்கு விதிவிலக்கா?. தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஏக பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகள் தங்களைத் தாங்களே ஒரு காலத்தில் அறிவித்துக் கொண்டார்கள். அவர்கள் இல்லை என்றாக்கப்பட்ட பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்களைத் தமிழர்களின் அரசியல் ஏக பிரதிநிதியாக அறிவித்துக் கொண்டது. அதில் என்ன விசேடம் என்றால், அடுத்தபடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏக தலைமை தாங்கள் என்று தமிழரசுக் கட்சி சொல்லிக் கொண்டதுதான். அதன் அடுத்தபடி என்னவென்றால், எங்களது சின்னத்தில்தான் நீங்கள் எல்லோரும் போட்டியிடுகின்றீர்கள். நாங்கள் தான் தலைமை என்றும் ஒரு பேச்சு. அதன் காரணமாகவே அதிலிருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கட்சிகள் ஒவ்வொன்றாக கழன்று போயின. இப்போது அதனால் தமிழ்த் தேசிய அரசியலில் இரண்டுக்கு மூன்று தமிழ்க் கட்சிகள் புதிதாக உருவாகியும் விட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் முதலே இருக்கின்ற ரெலோ, யுத்தம் முடிவுற்ற பின்னர் இணைந்து கொண்ட புளொட் ஆகிய கட்சிகளுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முதல் தேர்தலின் பின்னர் இணைந்து கொண்ட தமிழரசுக் கட்சியும் இருந்து கொண்டிருக்கின்றன.



உள்ளூராட்சித் தேர்தலானது தென்பகுதித் தேசியக் கட்சிகளுக்கு தமது பலத்தினைப் பரீட்சிப்பதற்கான தேர்தல். இங்குள்ள எமது பிரதேசக் கட்சிகளுக்கு அவ்வாறானதல்ல என்ற நிலைப்பாடு வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் சிலவற்றிடம் காணப்படாலும், ஒருவகையில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலானது ஒரு பலப்பரீட்சையே!. இப்போது உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்திலே தேர்தலில் போட்டியிடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆப்பிரகாம் சுமந்திரன், மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடியில் கடந்த ஜனவரி 08ஆம் திகதி நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக அறிவித்திருக்கிறார். இது வேறு விதமான பல பிரச்சினைகளை தமிழர் அரசியலில் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இம் முறை உள்ளூராட்சி தேர்தலினைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு தொழிநுட்ப ரீதியாக கையாளும். அதாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற மூன்று கட்சிகளும் தேர்தலில் போட்டியிட்டால் ஒரு கட்சி வட்டாரத்தில் வென்றால், மற்றயகட்சி விகிதாசாரத்திலே வெல்லும். இவ்வாறு வெற்றி பெற்றால், அனைத்து சபைகளையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெல்லக் கூடியதாக இருக்கும். இதுவே எமது உத்தி மாறாக பிரிந்து செல்வதல்ல. ஆனால், தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்திலேயே போட்டியிடும், ஏனைய இரண்டு கட்சிகளும் போட்டியிடும். இதுவே எனது கட்சியின் ஏகோபித்த தீர்மானம், இதன் கருத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிளவுபடுவதோ, தமிழரசுக் கட்சி பிரிந்து தனித்து போட்டியிடுவதோ இல்லை என்று அவர் தெரிவித்திருக்கின்றமையானது, தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடப் போகின்றது என்ற அர்த்தத்தையே கொண்டு வருகிறது. இருந்தாலும், இந்தத் தீர்மானம் தனித்து போடியிடுகின்ற தீர்மானம் இல்லை என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

நிலைமை இவ்வாறிருக்க, தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிடப் போகின்றது என்பதனைக் கொண்டு ரெலோ மற்றும் புளொட் ஆகிய கட்சிகள் வெளியிலே இருக்கின்ற தமிழ்த் தேசிய நிலைப்பாடுகள் கொண்ட ஏனைய கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது என்ற தீர்மானத்தினை எடுக்க முயன்று வருவதாக அறியமுடிகிறது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை குறித்து முயற்சிகள் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேளைகளிலும், அவ்வாறான கட்சிகளை ஒன்றிணைத்து, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளிலும், தமிழரசுக்கட்சியின் ஒத்துழையாமை காரணமாகவும், விட்டுக் கொடுக்காமை போன்ற நடவடிக்கைகள் காரணமாகவும் இப்போது தமிழ்த் தேசிய அளவில்






உள்ள கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைக்க முடியாத நிலையே காணப்படுகிறது. இந்த நிலை தொடர்ந்து கொண்டிருப்பது, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கின்ற முயற்சியில் பயனின்மையையே கொண்டு வரலாம்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறுவதைப்போல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு விட்டது. தமிழரசுக் கட்சி தனியாக பிரிந்து விட்டது என்ற அர்த்தப்படவில்லை என்றாலும், இதனை அவ்வாறே பார்க்க வேண்டிய கட்டாயம் அனைவருக்கும் ஏற்பட்டு விடுகிறது. தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடும் என்ற அறிவிப்பையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள மற்றைய இரண்டு கட்சிகளும் தர்மசங்கடமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவே கொள்ள முடியும். இந்நிலையில் ஜனாதிபதியின் தீர்வுத் திட்டம் தொடர்பான அறிவிப்பையடுத்து உருவான அலையில் அடிப்பட்டுக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் தரப்புகள் இன்னமும் ஒரு நிலைக்கு வரவில்லை. ஒருவர் ஒருபக்கம் இழுத்துக் கொண்டும் காரணங்களைச் சொல்லிக் கொண்டும் இருந்து வருகிறார்கள். பேச்சுவார்த்தை தொடர்பில் அழைப்பதிலும், அழைப்பு விடுக்கப்படுவதிலும் கூட பல குழப்படிகள் நடந்த வண்ணமிருக்கின்றன.

சந்திப்புகள் நடைபெறுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த கட்சிகளும், வேறு வேறு கருத்துகளை வெளியிடுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கின்ற கட்சிகளுக்கும் வேறு நிலைப்பாடுகள் காணப்படுகின்றன என்பது போன்றுதான், சுமந்திரனுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றன. அரசியல் கைதிகளின் விடுதலை, எமது நிலம் அபகரிக்கப்படுவதை நிறுத்தப்படல் வேண்டும், அபரிக்கப்பட்ட நிலங்கள் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும், அரசியலமைப்பில் இருக்கின்ற அதிபாரப்பரவலாக்கல் உடனடியாக அமுல்படுத்தப்படல் வேண்டும், சமஸ்ட்டி அடிப்படையில் வடகிழக்கில் அதிகாரப் பூர்வமான அதிகாரப் பகிர்வு செய்யப்படல் வேண்டும் ஆகிய கோரிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப் பட்டிருக்கின்ற நிலையிலேயே பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

அவ்வாறு பார்ப்போமானால், ஜனாதிபதி அறிவித்திருக்கின்ற எதிர்வரும் பெப்ரவரி 04ஆம் திகதி நடைபெறவுள்ள, சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வைக் கொண்டு வருதல் சாத்தியப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லாமலேயே இருக்கின்றன. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான முன்னெடுக்கப்படுகின்ற தமிழர் தரப்பின் முயற்சிகள் பலனளிக்க வேண்டும். நடைபெற்ற பேச்சுகளும், முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களும் கிடப்பில் போடப்பட்டவையாக மாறிவிட்ட நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பின் சாத்தியப்பாடுகள் பார்க்கப்படுகின்றன. ஆராயப்பட்டு வருகின்றன.

இந்த முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், மக்கள் அரசியலுக்கான முதல் படியான உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பும், வேட்பாளர் கண்டுபிடிப்புகளும், வேட்பு மனுத்தாக்கலும் நம்பிக்கையீனமாக விட்டுவிட முடியாததொன்றாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்களுடைய ஏக அரசியல் தரப்பாக வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டாலும், அந்த நிலைமை புலிகளின் முடிவுக்குப் பின்னர் சிறிது சிறிதாக குறைவடைந்து கொண்டே வருகிறது. அல்லது அந்த நிலைமை வெளிப்படுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டும் வருகின்றன. அதற்குக் கடந்த கால தேர்தல்கள் நல்ல உதாரணமாகும். மீண்டும், மீண்டும் இவ்வாறான நிலைமையை ஏற்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாகத் தன்னைக் காட்டிக் கொள்கின்ற தமிழரசுக் கட்சியை மாத்திரம் குற்றஞ்சாட்டவும் முடியாது. அது இல்லையென்று சொல்லவும் முடியாது.

தேசியக் கட்சிகளுக்கு வேறு வேலைகள் இருந்தாலும், தமிழ்த் தேசியத் தரப்பின் முதல் வேலைப்பாடு தமிழ் மக்களினுடைய அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதாகும். ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தை, உள்ளூராட்சித் தேர்தல்கள் இவை இரண்டுமே, ஏக காலத்தில் கொடுக்கும் நெருக்கடிகளை எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர் கொள்ளப் போகிறது? என்பது முக்கியமானது. அதற்கிடையில் தற்போது உருவாகியிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சி விடுத்துள்ள அறிவித்தலால் மேலும் மோசமடையக் கூடாது என்பதும் எதிர்பார்ப்பே!.


BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Flugtickete und hotel kann man auch hier buchen
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
الطيران العماني
OMAN AIR
QATAR AIRWAYS القطرية
एअर इंडिया
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com



# கடன்களைச் சாதனைகளாகக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள்



இலங்கை இதுவரை 16 தடவை சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கி இருக்கின்றது. குறிப்பாக திரு ரணில் விக்கிரமசிங்கே கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்த போது மட்டும், 4 தடவைகள் கடன் வாங்கி இருக்கின்றார். திரு ரணில் விக்கிரமசிங்கே தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம், தங்களின் நடுத்தர மற்றும் நீண்டகால கடன்களை மீள செலுத்துதலில் ஏற்பட்ட நெருக்கடிகளில் இருந்து தன்னை பாதுகாப்பதற்காக *'Extended Fund Facility'* திட்டத்தின் கீழ் 2015-2019 காலப்பகுதியில் கடன்களைப் பெற்று இருந்தது.

அதே போல திரு ரணில் விக்கிரமசிங்கே தலைமையிலான அரசாங்கம் தான் எதிர்கொண்டு இருந்த நடுத்தர மற்றும் நீண்டகால கடன்களை மீள செலுத்தும் ஆற்றலை இழந்த சூழ்நிலையில், *'Extended Fund Facility'* என்கிற திட்டத்தின் கீழ் 2003-2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதி உதவியை பெற்று இருந்தார்கள். அதே சம காலப்பகுதியில், அந்நிய செலாவணி இருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடு செய்யும் நோக்கில், ரணில் விக்ரமசிங்கே அரசாங்கம் *Extended Credit Facility* என்கிற திட்டத்தின் கீழ் மற்றுமொரு நிதி உதவியைப் பெற்று இருந்தார்கள்.

இது மாத்திரமின்றி, 2001-2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரு ரணில் விக்கிரமசிங்கே அரசாங்கம் அந்நிய செலாவணி இருப்பு தொடர்பான நெருக்கடியில் இருந்து தற்காத்து கொள்ளுவதற்காக, *'Standby Arrangement'* கீழும் கடன் உதவிகளை பெற்று இருந்தார்கள். தற்போது 5 ஆவது தடவையாக திரு ரணில் விக்ரமசிங்கே தலைமையிலான ராஜபக்சே அரசாங்கம், 2.9 பில்லியன் அமெரிக்கா டொலர் உதவியைப் பெறுவதற்கான 'அலுவலர் நிலை உடன்பாடு' *(Staff Level Agreement)*ஐ எட்டி இருக்கின்றது.

இனி கடன்களைப் பெற சர்வதேச நாணய நிதிய நிர்வாகத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். அதற்காக அரச நிதி முகாமைத்துவத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக இலங்கை கடன் செலுத்த இருப்பவற்றை மறுசீரமைப்பு செய்யும் சிறந்த வேலைத் திட்டத்துக்கு செல்ல வேண்டி இருக்கின்றது. சீனாவின் ஒத்துழைப்பு கிடைத்தால் கூட, இன்னும் 4 மாதங்கள்

காத்திருக்க வேண்டும். அதன் பின்னர் நாணய நிதிய 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனின் முதல் தவணை பணம் கிடைக்கும். இலங்கையின் மொத்த வெளிநாட்டு கடன், அண்ணளவாக 52 பில்லியன் அமெரிக்க டொலராக இருக்கின்ற நிலையில், மேற்படி கடன் உதவி மூலம் இலங்கை மீண்டு விட முடியாது.

மாறாக கடன்களை மீள செலுத்தும் ஆற்றலை இழந்து, முறைவடைந்த நிலையில் உள்ள இலங்கை, சர்வதேச நாணய நிதிய கடன் திட்டத்தோடு, மீண்டும் சர்வதேச சந்தையில் கடன் பெறுவதற்குத் தகுதியானதாக மாறும். இதன் மூலம் தற்போதைய நெருக்கடிகளைத் தீர்க்க மீண்டும் கடன் வாங்க வேண்டும். இதற்கு முடிவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் திரு ரணில் விக்ரமசிங்கே அவர்கள், நல்லாட்சி அரசாங்கத்தின் சார்பில் 2015 ஆம் ஆண்டு கடன் பெறுகின்ற போது, இலங்கையின் ***Debt-to-GDP ratio*** சராசரியாக 75% ஆக இருந்தது. தற்போது 2022 ஆம் ஆண்டு ***Debt-to-GDP ratio*** 101% ஆக உயர்ந்து இருக்கின்றது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டு 54% வீத வீழ்ச்சியைச் சந்தித்து வெறும் 450 மில்லியன் அமெரிக்கா டொலர்களாக மட்டுமே இருந்தது. இது 2020 ஆம் ஆண்டு 0.43 பில்லியன் அமெரிக்கா டொலர்களாக வீழ்ச்சியடைந்தது. 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மட்டும் 41.64% வீழ்ச்சியாகும். அதே போல நல்லாட்சி காலத்தில், தனது அரச வருமானத்தில் 95.4% வீதமான வருமானங்களை, தான் பெற்ற கடன்களை மீள செலுத்துவதற்கு பயன்படுத்தி வந்தார்கள். தற்போது இலங்கையின் வருமானத்தில் 71.7% வீதம் கடன்களுக்கான வட்டியை மட்டும் செலுத்தும் சூழலுக்கு வீழ்ச்சியடைந்து இருக்கிறது.

2018 ஆம் ஆண்டு மட்டும் நல்லாட்சியில் அரச நிறுவனங்கள் 42,364 மில்லியன் ரூபா நட்டமடைந்து இருந்தன. தற்போது முதல் அரையாண்டில் மட்டும் 8,59,628 மில்லியன் ரூபா பெறுமதியான நட்டம் ஏற்பட்டு இருக்கின்றன. ஆட்சியாளர்கள் மாறி, மாறி அதிகாரத்திற்கு வருகின்ற போதும், மாறி, மாறி கடன்களைப் பெறுகின்ற போதும், தொடர்ந்து இலங்கை வீழ்ச்சியடைந்து வருகின்றது என்பதை மேற்படி தரவுகள் உறுதி செய்கின்றன. எந்த முன்னற்றமும் கிடையாது. பொருளாதாரம் தொடர்ச்சியாக சீரழிந்து வருகின்றது.

***Transparency International*** வெளியிடும் ஊழல் நாடுகளின் பட்டியலில் கூட இலங்கை 101 ஆவது இடத்தில கடந்த ஆண்டு இருந்தது. இந்த நாட்டை நிர்வகித்த, ஜனாதிபதிகளாக, பிரதமராக இருந்தவர்களின் சிந்தனை, நிலைப்பாடு ஆகியன இந்த அவலத்திற்கு காரணமாக இருக்கின்றது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது முதல், அரசியல் மற்றும் நிதி நெருக்கடிகளை எவ்வாறு சமாளிப்பது? என்பது பற்றி திரு ரணில் விக்ரமசிங்கே அவர்களிடம் கூட எந்தத் திட்டமும் கிடையாது. வரவு, செலவு திட்ட உரையில் கூட பொருளாதார நெருக்கடிக்கு அல்லது அந்நிய செலாவணியை ஈர்க்கும் உண்மையான பொறிமுறைகள் குறித்து எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

மாறாக தன்னையும், தனது கட்சியைப் பற்றி மட்டுமே சிந்திக்கின்றார். இதற்காக ராஜபக்சே குடும்பம் உட்பட பொருளாதார குற்றவாளிகளைப் பாதுகாத்து, அவர்களுடன் கூட்டு சேர்ந்து நிற்கின்றார். ராஜபக்சே குடும்பம், சந்திரிக்கா, பிரேமதாசா, ரணில், என எல்லோரும் எல்லா அரசாங்கங்களும் ஊழலில் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல.! இலங்கைத் தீவை கொள்ளையடித்ததோடு, ஒருவரை ஒருவர் இன்று வரை காப்பாற்றி வருகின்றார்கள். அதே போல பொருளாதார நெருக்கடிக்கான உண்மையான காரணிகளை இவர்கள் பேசுவதில்லை. பொருளாதார கட்டமைப்பு ரீதியான மாற்றத்திற்கும், இவர்கள் தயாரில்லை. இதன் காரணமாகத்தான் குறுகிய கால இடைவெளிகளில் இலங்கை பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கின்றது.

எமக்கு பின்னால் இருந்த பங்களாதேஷ், வியட்நாம் போன்ற நாடுகள் உலக நாடுகளுடன் இணைந்து, ஏற்றுமதி பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி முன்னோக்கிப் போய் விட்டார்கள். ஆனால், நாங்கள் கடன்களைச் சாதனைகளாகக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றோம்.

# உளம்

## திறக்கும் உண்மைகள்

### அலைபேசி!

உனக்காக மட்டும்
உழைப்பவன் அவன்..
உன்னை மட்டுமே
எழுதுவான் அவன்...
உன்னை மட்டுமே
பாடுவான் அவன்....
நீ உன்னவனை
சேரும் நாள்,
இவன் ஆட்சி
கவிழும் உன்னால்.



### மன்னிப்பு!

உனக்கு சரி எண்டு
பட்டதை சொன்னதற்காக
மன்னிப்பு கேட்காதே
அது நீ உண்மையாக
இருப்பதை
நீயே மதிக்கவில்லை
என்பதாகிவிடும்.

### இழப்பு!

வாழ்க்கையில்
எதையாவது
இழக்கும்போது
எண்ணிக்கொள்
வாழ்வில் நீ இழந்தைவிட
சிறப்பான ஒன்றுக்காக
வாழ்க்கை உன்னை
தயார் செய்கிறது என்று.



### உன்னுடன் நான்

ஆயுள் முழுமைக்குமானவற்றை
பேசித் தீர்த்தாயிற்று
ஆங்காங்கே சில கோபப் பார்வைகள்
அதனிடையே மென்மையாய்
விரல்களின் இறுக்கம்
அவ்வப்போது
ஓராயிரம் புன்னகைகள்
சிறு சிறு சீண்டல்களோடு
இனி மௌனமாய்
ஒரு யுகம் போதும்
உன்னோடு..!
ஆம் கொலை செய்வேன்

ஆக்கலும் அழித்தலும்
மனிதனா? கடவுளா?
அக்குழப்பம் வரும்போது
இகுதல் (சொரிதல்)செய்வேன்
என் தலையை
ஏன்? எதற்கு இந்த வாழ்வு?
இந்த விருப்பம் இல்லா
ஓட்டங்கள் என்று...
யாரேனும் உண்மை தெரிந்தால்
ஒரு கொலை செய்வேன்...

### ஏகாந்ததுணை

இப்படி தான் சில இரவுகள்
அவ(ன்)ள் காணமல் போய் விடுவாள்
அப்போது என்
ஏகாந்த துணைகள் எல்லாம்...
நட்சத்திரங்களும் நிலவும்
என்று தேடிச் செல்வேன்
அன்று நட்சத்திரங்களும் இல்லை
அவளும் இல்லை நிலவும் இல்லை...
வெறும் வெற்றிடங்களும் நானும்
துணைகளின் வறட்சியின் தனிமையில்
ஏதோ ஒரு தருணத்தில்
தன் தனித்தன்மையை
தவறாமல் உணர்த்தும்
தனிமை எப்போது வந்தாலும்
எத்தனை முறை வந்தாலும்
அழையா பிடிக்காத விருந்தாளியே

- நா.மேனன்

"உளம் திறக்கும் உண்மைகள்...." என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

# அகர கவிக்களம்....


## துணை!

புகழ்ச்சியில் வளர்பவனுக்குதான்
பிறர் துணை தேவை
முயற்சியில் வளர்பவனுக்கு
தன்னம்பிக்கையே துணை.



## வெறுமை!

எப்போதும் முடிவதில்லை
இயந்திரமாய் வாழ்ந்து
முடித்த பின்பும்
இதயம் நிரம்பாத
செயற்கை வாழ்வின்
வெறுமைகள்.



## வாழ்க்கை!

ஒரே பத்திரிகையில்
பிறந்தநாள் வாழ்த்தும்
நினைவஞ்சலியும்
இது தான் வாழ்க்கை.




## காதலர் தினம்!

மழையிடம் பேச மின்னல்..
மலையிடம் பேச தென்றல்
மலரிடம் பேச வண்டு..
கனவோடு பேச தூக்கம்
என் மனதோடு பேச நீ..



## அடக்கம்!

தவறான பதிலை விட
மௌனம் சிறந்தது
எதிரியை அடக்குவதை விட
உன் நாக்கினை அடக்குவதே
மிக சிறந்தது



## துரோகி!

துரோகிகள் மீது
நம்பிக்கை வைத்ததற்காக
வருத்தப்படாதே!
நீ வைத்த நம்பிக்கைதான்
உனக்கு அவர்களைக்
காட்டி கொடுத்திருக்கிறது.

## பாப்பா!

சாதிகள் இல்லையடி பாப்பா
படித்தோம், புகழ்ந்தோம்
சாதிகள் பார்த்தே திருமணம்
இன்னும் மூத்தத் தமிழ்க்குடிகளில்!..

## அவலங்கள்!..

இடம் தேடி அலைந்தே காத்துக்
கிடக்கின்றன மனித உடலங்கள்
இன்றும் கொரோனா அவலங்கள்
சீனாவில் மட்டுமல்ல உலகெங்கும்!..

## வரிசை!..

மனைவி தாலியுடன்
அடைவுக்கடை வரிசையில்
கணவன் மதுக்கடையில்
வரிசையில் நிற்கிறான்!..

## அலைகள்!..

அலைமோதும் உடுப்புக் கடைகள்
முட்டிமோதும் சினிமா அரங்குகள்
சனத்திரள் நிறைந்த கோவில்கள்
வெறிச்சோடிக் கிடக்கும் நூலகம்!..

## மயக்கம்!..

பெற்றதாய் பிசியால் தயக்கம்
மகன், மகள் கொண்டாட்ட
போதைப் பாட்டியில் மிதமிஞ்சி
உண்டு குடித்ததில் மயக்கம்!..

**● வைரமுத்து சிவராசா,**
**யேர்மனி.**



# திருமலையில் கொல்லப்பட்ட
# மாணவர்களுக்கு நீதி கிடைக்குமா...?

ஆர்.பாரதி

திருமலையில் 2006, ஜனவரி 02 ஆம் திகதி கொல்லப்பட்ட ஐந்து மாணவர்கள் கடந்த செவ்வாய் கிழமை கொழும்பில் நினைவுக் கூரப்பட்டிருக்கின்றார்கள். இந்த நினைவுக் கூரலில் உரையாற்றிய "அரகலய" செயற்பாட்டாளர்களில் ஒருவரான ராஜ்குமார், ரஜிவ்காந்த் 16 வருடங்களாக தனது மனதிலே அழுத்திக் கொண்டிருந்த உண்மைகளை அம்பலப்படுத்தி இருக்கின்றார். அவர் சொன்ன விடயங்கள் சிங்கள மக்களின் மனச்சாட்சியையும் தொட்டிருக்கின்றது.

“பொறுப்பு கூறல் இல்லாமல் இலங்கையிலே கட்டி எழுப்பப்படுகின்ற எதுவுமே நிலைக்காது” என்ற விடயத்தை அவர் அங்கு உறுதியாகக் கூறிய அதே வேளையில், இந்தப் படுகொலைகளுக்கு இராணுவம்தான் காரணம் என்பதையும் துணிச்சலாகத் தெரிவித்திருக்கின்றார். எந்தவொரு காரணமும் இல்லாமல், கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தை முடித்துவிட்டு, பல்கலைக் கழகத்துக்குச் செல்வதற்கு காத்திருந்த மாணவர்களே, இவ்வாறு திருமலை கடற்கரையில் வைத்து கொடூரமான முறையில் கொல்லப் பட்டனர்.

திருமலை கடற்கரையிலிருந்து அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த போது, அந்தப் பகுதியை திடீரென சுற்றி வளைத்த விஷேட அதிரடிப் படையினர், அவர்களின் தலைகளில் துப்பாக்கியை வைத்து சுட்டுக் கொன்றார்கள். ஐந்து மாணவர்கள் அந்த இடத்திலேயே கொல்லப்பட, இரண்டு மாணவர்கள் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, காப்பாற்றப்பட்டனர். இந்த சம்பவங்களின் சாட்சியாக இருப்பவர்களில் ஒருவர்தான் ராஜ்குமார் ரஜிவ்காந்த். இந்த சம்பவம் குறித்து அவர் இவ்வாறு விபரிக்கின்றார்;

“திருமலை கடற்கரையில் ஒரு காந்தி சிலை இருக்கின்றது. அதற்கு அருகில் ஒரு கட்டு இருக்கின்றது. அதில்தான் இந்த ஏழு பேரும் அமர்ந்திருந்தார்கள். அந்த நேரம் நீல நிற, முச்சக்கர வாகனம் ஒன்றில் வந்த ஒருவர் கைக்குண்டுத் தாக்குதல் ஒன்றை அந்த இடத்தில் நடத்தினார். அப்போது மக்கள் அனைவரும் சிதறி ஓடினார்கள். இந்த மாணவர்களுக்கு அந்த கைக்குண்டு தாக்குதலில், சிறு சிறு காயங்கள் மட்டுமே ஏற்பட்டது. கடற்கரையிலிருந்து சிறிது தொலைவில் உள்ள எனது மாமாவின் வீட்டில் அப்போது நான் நின்றேன். இந்த சத்தம் எனக்கும் கேட்டது. ஏதோ நடந்துவிட்டது என்பது மட்டும் தெரிந்தது.

டாக்கர் மனோகரன் அப்போது இந்த சத்தத்தையடுத்து அவரது மகன் ரஜீகனுக்கு

தொலைபேசி எடுத்திருக்கின்றார். பதில் இருக்கவில்லை. அதனால், அவர் கடற்கரையை நோக்கிச் சென்றார். அப்போது கடற்கரைப் பகுதி மின்விளக்குகள் அனைத்தும் துண்டிக்கப் பட்டு, கடற்கரைப் பகுதிக்குச் செல்வதைக் கடற்படையினர் தடுத்தார்கள். மாணவர்கள் தம்மைக் காப்பாற்றுமாறு குரல் எழுப்பிக் கொண்டிருந்ததை டாக்டர் மனோகரனால் கேட்க முடிந்தது. அதன்பின்னர் அவர் உள்ளே செல்ல முயன்ற போதும், படையினர் அவர் உள்ளே செல்வதை அனுமதிக்கவில்லை.

இரவு 8.00 மணியளவில் திருமலை வைத்தியசாலையில், ஐந்து சடலங்கள் வைக்கப்பட்டிருப்பதான தகவல், திருமலை முழுவதும் பரவியது. அங்கும் இராணுவம், பொலிஸ் குவிக்கப்பட்டிருந்தது. அந்தச் சடலங்களைக் கையளிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டது. கொல்லப்பட்ட மாணவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என எழுதி, கையொப்பமிட்டுத் தந்தால் மட்டுமே பிரேதங்களைக் கையளிப்போம் என படையினர் உறுதியாகக் கூறினார்கள். இந்த மாணவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இவர்கள் திருமலை இந்துக் கல்லூரியில் படித்து, உயர்கல்விக்காகக் காத்திருந்தவர்கள்.

அதனால், நாம் படையினரின் கோரிக்கைக்கு எமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தோம். எக்காரணம் கொண்டும் அவ்வாறு கையெழுத்து வைத்து கொடுக்க மாட்டோம் என்பதை உறுதியாகத் தெரிவித்தோம். இதனால் அரசாங்கத்துக்கும் தெரிந்தது, இது தமது மாபெரும் தவறு என்பது. அதனால் இராணுவம் அகற்றப்பட்டது. ஆனால், இன்றுவரையில் இதற்கான நீதி கிடைக்கவில்லை" என்று ராஜ்குமார் ரஜிவ்காந்த் கொழும்பில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயங்களுடன் தப்பிய இருவரும், நேரில் பார்த்த பலரும் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் தெரியும் இதனை நடத்தியது இராணுவம்தான் என்பது. அத்துடன் மாணவர்கள் மிகவும் நெருக்கமாக தலையில் சுடப்பட்டார்கள் என்பதற்கு ஊடகவியலாளர் சுகிர்தராஜன் எடுத்த புகைப்படங்களும் ஆதாரமாக, சாட்சியாக இருக்கின்றது. இந்த புகைப்படங்களை எடுத்த சுகிர்தராஜன் இரண்டு தினங்களில் அவரது வீட்டு வாசலிலேயே வைத்து சுட்டுக் கொல்லப் பட்டார் என்பது கொடூரத்தின் உச்சம்.

திருமலை கடற்கரையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அரசாங்கம் சொன்னது இதுதான். "விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த சிலர் படையினரை நோக்கிக் கைக்குண்டுத் தாக்குதலை நடத்த முயன்றார்கள். அது அவர்களுக்குள்ளேயே தவறுதலாக வெடித்ததால், அவர்களில் ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள்" இவ்வாறு அரசாங்கம் செய்தி வெளியிட்டது. கைக்குண்டு வெடித்தால் அவர்களது உடல்களில் காயங்கள் எவ்வாறு இருக்கும்? என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், தலையில் அவர்கள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள் என்பதைத் தனது புகைப்படங்கள் மூலமாக அம்பலப்படுத்த முற்பட்டமையால்தான் சுகிர்தராஜன் அதற்காக தனது உயிரை விலையாகக் கொடுத்தார்.

இவ்வாறு தமிழ் இளைஞர்களைக் கொலை செய்வதும், பின்னர் அவ்வாறு இடம்பெற்ற கொலைகளை அவர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு பட்டவர்கள் எனக்கூறி, ஏதோவொரு வகையில்




நியாயப்படுத்துவதும் போர்க் காலத்தில் சகஜமாக இடம்பெற்றது. இதற்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் அல்லது நீதிக்காகப் போராடுபவர்களைப் புலிகளின் ஆதரவாளர்களாக சித்தரிப்பதும், ஆட்சியாளர்களின் உபாயமாக இருந்து வந்திருக்கின்றது. அதனால்தான் பலர் மௌனித்தார்கள்.

திருமலையில் கொல்லப்பட்ட இளைஞர்களின் பெற்றோர், உறவினர்கள் நீதி கோரி நீதிமன்றம் சென்றார்கள். அவர்கள் அனைவருக்குமே உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதனால், அவர்கள் தமது வழக்குகளைக் கைவிட்டு, வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். கொல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரின் தந்தையான டாக்டர் மனோகரன் இந்தப் பிரச்சினையை ஜெனிவா வரையில் கொண்டு சென்றார். அவரது விடாமுயற்சியால்தான் இந்தப் பிரச்சினை சர்வதேச அரங்கில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

சர்வதேச அழுத்தங்கள், டாக்டர் மனோகரன் முன்னெடுத்த போராட்டம் என்பன காரணமாக, விஷேட அதிரடிப்படையைச் சேர்ந்த 12 பேரை அரசாங்கம் கைது செய்தது. இது வெளிநாட்டு அழுத்தம் காரணமாகச் செய்யப்பட்ட ஒரு நாடகம். சில மாதங்களில் கைதானவர்கள் பிணையில் விடுவிக்கப் பட்டனர். பின்னர் போதிய சாட்சியம் இல்லை எனக் கூறப்பட்டு அவர்கள் அனைவருமே விடுவிக்கப்பட்டு விட்டனர்.

இலங்கையில் போதிய சாட்சியம் இல்லை எனக்கூறப்பட்டு, கைதான படையினர் விடுதலை செய்யப்படுவது இதுதான் முதன்முறையல்ல. குமாரபுரம் படுகொலை வழக்கிலும் இதுதான் நடந்தது. ஆக, மிக மோசமான படுகொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் இன்று சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கின்றார்கள். சட்டத்தின் பிடியிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்கின்றார்கள்.

இவ்வாறான படையினரைச் சிங்கள மக்கள் யுத்த வீரர்களாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில்தான், பொறுப்புக் கூறல் தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற நினைவுக் கூட்டத்தில் உரையாற்றிய ராஜ்குமார் ரஜிவ்காந்த் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

"கோட்டா கோ ஹோம்" என்ற கோஷத்துடன் தென்னிலங்கையில் வெடித்த இளைஞர் கிளர்ச்சி, முழுமையாக வெற்றி பெற்றதா? இல்லையா? என்ற விவாதங்கள் ஒருபுறத்தில் இடம் பெற்றுக் கொண்டிருந்தாலும், சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பலவற்றை அது ஏற்படுத்திச் சென்றிருக்கின்றது. குறிப்பாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பில், இராணுவத்தினரால் தமிழ் மக்களுக்கு இளைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து பேசக்கூடிய ஒரு வெளியை தென்னிலங்கையில் இது உருவாகியிருக்கின்றது.

"அரகலய" போராட்டம் இடம் பெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே காலிமுகத் திடலில் யாழ் நூலகம் எரிப்பு நினைவுக் கூரப்பட்டது. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகள், தமிழ் ஊடகவியலாளர் படுகொலைகள் என்பன நினைவுக் கூரப்பட்டன. இவற்றின் மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் சிங்கள மக்களும் புரிந்துகொள்ளும் நிலை ஓரளவுக்கு ஏற்பட்டது.

அந்த வகையில் திருமலையில் இடம்பெற்ற ஐந்து மாணவர்களின் படுகொலைகள் கொழும்பு, மருதானையிலுள்ள பொது மண்டபம் ஒன்றில் நடைபெற்ற போது, ராஜ்குமார் ரஜீவ்காந்த நிகழ்த்திய உரை பொறுப்புறலின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக இருந்தது. அவரது உரை சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. திருமலையைச் சேர்ந்தவரான ரஜீவ்காந்த தனக்கு அங்கு கிடைத்த அனுபவங்களை வெளிப்படுத்திய போது, கூட்டத்தில் பங்கேற்றிருந்த சிங்கள மக்களும் ஆச்சரியத்துடன் அவற்றைச் செவிமடுத்தார்கள்.

சிங்கள மக்களில் ஒரு தரப்பினரிடம் மன மாற்றம் உருவாகி வருவதை இவை உணர்த்துகின்றன. இவர்கள் மத்திய தரப்பினராகவும், படித்தவர்களாகவும் இருக்கின்றார்கள். இருந்தபோதிலும், தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும், நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதற்கான செயன்முறைகளை முன்னெடுக்கும் போது, சிங்கள இனவாதிகளின் குரலை அடக்குவதற்கான உறுதிப்பாட்டை இவர்கள் கொண்டிருப்பார்களா?

# TR Bati

**Professionnelm, Fiable, Pileàíheure**

**நிபுணத்துவம், நம்பகத்தன்மை, குறித்த நேரத்தில்**
**அனைத்து வீட்டுவேலைகளும் செய்து கொடுக்கப்படும்.**



**+33 6 52 46 48 59**
**+33 6 52 60 29 06**

**1 Allée Pierre de Ronsard**
**77200 Torcy**
**France**

www.trbati.fr

- Rénovation — சீரமைப்பு
- Plomberie — தண்ணீர் குழாய் இணைப்பு
- Électricité — மின்சார வேலை
- Charpenterie — தச்சு வேலை
- Carrelage — மார்பிள் பதித்தல்
- Parquet — பலகை பதித்தல்

பாகம் : 32

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

## குறியீட்டு அரசியல் உத்திகளை பயன்படுத்துதல்

இந்துத்வாவின் அரசியல் உத்திகளை காஃப்மனின் குறியீட்டு அரசியல் **(Symbolic Politics)** தத்துவம் மூலம் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். அவர்கள் கற்பிதங்களின் **(Narratives)** சக்தியை நன்றாக உணர்ந்தவர்கள். பல்வேறு இந்துத்வ அமைப்புகளை நாடு முழுவதும் உருவாக்கி, கற்பிதங்களைப் பரப்புகிறார்கள். கற்பிதங்கள் சிறார்களிடம், வளரும் வயதில் உள்வாங்கப்பட்டு, உணர்வுகளுடன் பிணைவதால், சிறார்களை நோக்கி அவர்களின் செயல்பாடுகள் உள்ளன. ஒரு கற்பிதத்தை உள்வாங்கி, வளர்ந்தபின் அவர்களை மாற்றுவது கடினம். அவர்களின் அரசியல் ஆதரவு திசை தீர்மானிக்கப்பட்ட ஒன்றாக ஆகி விடுகிறது.

மத்திய அரசின் பாடத்திட்டங்கள் மூலமும் இந்துத்வா கற்பிதங்கள் பரப்பப் படுகிறது. அதனால் மாநில பாடத் திட்டங்களை ஒழித்துக் கட்டுவதில் குறியாக இருக்கிறார்கள். சிறுபான்மையினருக்கு எதிராக முத்திரை குத்தலும், ஓரவஞ்சனைகளும், கலவரங்களும் திட்டமிட்டு பரப்பப் படுகினறன. அவை சிறுபான்மையினருக்கு எதிராக மக்களைத் திருப்பி, அவர்களுக்கு ஆதரவாக மாற்றுகிறது. தமிழ்த்தேசிய அரசியல் தலைவர்களைக் கிருத்தவர்கள் என்று முத்திரை குத்துகிறது. ஈழப் போராட்டத்தையும், தமிழகத்தில் நடக்கும் அனைத்து போராட்டங்களையும் 'கிருத்துவர்களின் சதி' என்று பரப்புகிறது. அதே நேரம் தமிழர்களின் வரலாற்றுக் கற்பிதங்களைப் பரப்புவதற்கு தடங்கல் ஏற்படுத்துகிறது. ஈழப் போராட்டங்களைப் பற்றிய திரைப்படங்கள் தடை செய்யப்படுகின்றன. ஐயா நெடுமாறனின் நூலை உயர்நீதி மன்றம் அழிக்கச் சொல்கிறது. அகழ்வாராய்ச்சிகளில் தமிழரின் தொன்மங்களை மறைக்கப் பார்க்கிறது.

அவர்கள் செய்வது அனைத்தும் மனிதனின் உணர்வுகளை நோக்கி செய்யப்படும் அரசியல். தமிழர் என்ற உணர்வுகளைத் தூண்டும் அனைத்தும் தடை செய்யப்படுகிறது. அதே நேரம் இந்துத்வ உணர்வுகளைத் தூண்டும் அனைத்தும் புகுத்தப்படுகிறது. அவர்கள் செய்வது காஃப்மனின் குறியீட்டு அரசியல். ஈழத்திலும் அதுபோன்ற செயல்பாடுகளையே சிங்கள அரசு பின்பற்றுகிறது. எதுவெல்லாம் உணர்வுகளைத் தூண்டுமோ, அவை எல்லாவற்றையும் மறைப்பது, அழிப்பது என்பவற்றை முக்கியமாக அவர்கள் கருதுகிறார்கள். உதாரணமாக மாவீரர்களின் கல்லறைகளை இடித்தார்கள். போரில் இறந்த முக்கிய தலைவர்களின் உடல்களை, எங்கே நாம் கல்லறைகளை உருவாக்கி விடுவோமா! என்று காணாமல் செய்தார்கள். அதேநேரம் அவர்களின் புத்தமத கற்பிதங்களைத் தமிழர்களிடம் பரப்ப முனைகிறார்கள்.

நமது அரசியல் செயல்பாடுகள், அவர்களின் குறியீட்டு அரசியலை எதிர்கொள்ளும்படியாக இல்லை என்பதே எனது கருத்து. நமது அரசியல் என்பது மக்களின் பகுத்தறிவை நோக்கி நகர்கிறது. இது செவிடன் காதில் ஊதுகின்ற சங்கைப் போன்று, எந்த ஒரு பெரிய விளைவையும் உருவாக்கப் போவதில்லை. நாம் செய்வது நாயின் வாலை நிமிர்த்த நினைப்பது போன்றது.



பகுத்தறிவு மேடைப் பேச்சுகளுக்கு அவர்கள் என்றுமே தடை விதித்ததில்லை. அவற்றினால் எந்த பாதிப்பும் அவர்களுக்கு இல்லை என்று அவர்களுக்குத் தெரியும்.

அவர்களின் செயல்பாடுகளைப் பகுத்தறிவற்றது, நகைப்புக்குரியது என்று நாம் ஒதுக்கினால், நாம்தான் தோற்போம். நாம் நமது வரலாற்றுக் கற்பிதங்களை மக்களிடம் எப்படி பரப்புவது? எதிரிகளின் குறியீட்டு அரசியலை எப்படி தகர்ப்பது? என்ற நோக்கில் செயல்பட வேண்டும். அடிப்படையில் நமது அரசியல் செயல்பாடுகள் மக்களின் உணர்வுகளை நோக்கி நகர்த்தப்பட வேண்டும். அதற்காக நாமும் அவர்களைப் போல, மற்றவர்களின் மேல் வெறுப்பை கக்கவேண்டும் என்பதல்ல. மனிதனின் மூளை குறியீட்டு அரசியலுக்கு ஏற்றவாறே அமைந்திருக்கிறது. இதை நம்மால் மாற்ற முடியாது. இதை வைத்து நமது இலக்குகளை ஒரு நேர்மையுடன் அடைய முயலுவதே வெற்றிக்கான பாதையாக இருக்கும். கருத்துருவாக்கத்தில் குறியீட்டு சார்புகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

நாம் திட்டங்களையும், உத்திகளையும் வகுக்கும்பொழுது பகுத்தறிவுடன் ஆராய்ந்து,



சிறப்பாக உருவாக்கவேண்டும், ஆனால், மக்களிடம் அதை செயல்படுத்தக் கருத்துருவாக்கம் செய்யும் பொழுது, குறியீட்டு சார்புகளின் துணைக் கொண்டு செய்யவேண்டும். அப்பொழுதே அது மக்களின் உணர்வுகளைத் தூண்டி, நம்மை ஆதரிக்க வைக்கும். அதைப் போலவே நாம் மக்களை ஒன்று திரட்ட உருவாக்கும் அனைத்து இயக்கங்களும் குறியீட்டு சார்புகளைக் கொண்டு, மக்களை ஈர்ப்பதாக இருக்கவேண்டும்.

கற்பிதங்களைப் பரப்ப நாடு முழுவதும் அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். கற்பிதங்கள் என்பது நீண்ட காலநோக்கில் உருவாவது, உடனே மாற்ற முடியாதது. இந்துத்வ அமைப்புகள் கற்பிதங்களைப்




பரப்ப, நீண்டகால நோக்கில் செயல்பட்டு மக்களை மாற்றி வருகிறது. அதன் மூலம் அது அரசியலில் பலம் பெற்று வருகிறது. மேலும் மத்திய அரசின் பாடத்திட்டம் மூலம், மாநில பாடத்திட்டத்தை ஒழித்து, தமிழர் என்று நாம் கற்றுத்தரும் சிறு கற்பிதங்களையும் ஒழிக்கப் பார்க்கிறது. அவர்களைத் தடுத்து நிறுத்தி, நமது கற்பிதங்களை எவ்வாறு பரப்புகிறோமா, அதில் தான் நமது எதிர்கால வெற்றி இருக்கிறது. யார் இன்றைய குழந்தைகளின் மூளைக்கு சொந்தக்காரர்கள் ஆகிறார்களோ, அவர்களுக்குத் தான் எதிர்கால அரசியல். அவ்வாறு செயல்படுவதற்கான அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.தமிழ்க் கல்வியை மறுபரிசீலனை செய்யவேண்டும்

யூதர்கள் இரண்டாயிரம் வருடங்களாக தங்களுக்கு என்று ஒரு நாடில்லா விட்டாலும், தங்களை அழியாமல் காத்துக் கொண்டதற்கு ஒரு முக்கிய காரணம் அவர்களின் யூதக்கல்வி முறை ***(Jewish Education).*** ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் 100% சதவீதம் கல்வியை எட்டி விட்டார்கள். அவர்கள் வெவ்வேறு நாடுகளில், சிறு குழுக்களாக சிதறுண்டு கிடந்ததால், அவர்களின் ஈப்ரு மொழியை தாய் மொழியாகக் கற்பிக்க முடியவில்லை. அதனால் அவர்களின் அடையாளத்தை அழியாமல் பாதுகாக்க உருவாக்கப் பட்டதுதான் யூதக் கல்விமுறை.

யூதக்கல்வி முறை என்பது குறியீட்டு அரசியலை மையமாகக் கொண்டது. கற்பிதங்கள் தான் ஒரு குழுவின் ஒற்றுமைக்கு அடிப்படை. அது எந்த மொழியிலும் கற்பிக்கப்படலாம் என்பதால், அவர்கள் எந்த நாடுகளில் வாழ்ந்தார்களோ, அந்த மொழியிலேயே குழந்தைகளுக்குக் கற்பித்தார்கள். ஈப்ரு மொழியை ஒரு பண்பாட்டு குறியீட்டு மொழியாக கற்பித்தார்கள். அவர்களுக்கு அடிப்படையில் அதில் பிரார்த்தனை செய்யவும், எழுத்துகளை அடையாளம் காண்பது, ஓரளவு எழுத்துக் கூட்டிப் படிக்கவும் கற்றுக் கொடுத்தார்கள். அனைவராலும் அவ்வாறு முடியும் என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், அவர்களின் ஈப்ரு மொழி உயர்வானது என்ற உணர்வுகள், கற்பிதங்கள் மூலம் கற்றுத் தரப்பட்டன. இது இந்தியாவில் வடமொழியைப் போல, வழக்கொழிந்தாலும் கற்பிதங்களால் உயர்வாகக் கருதப்பட்டது.




முடிவில் வாய்ப்பு கிடைத்த பொழுது, யூதர்கள் இழந்த நாட்டையும், மொழியையும் மீட்டுவிட்டார்கள். இதெல்லாம் கற்பிதங்கள் மூலம் வரும் உணர்வுகளின் உந்துதலால் செய்யப்பட்டது. இந்துத்வ குழுக்களும் அவ்வாறு வடமொழியை மீட்க முயற்சி செய்கின்றன. ஒரு மொழி வாழ அதன் தகுதி என்ன? என்பதுதான் முக்கியம். மொழிக்குத் தகுதி இருந்தால், இறந்த மொழியை மீட்டு விடலாம். தகுதி இல்லாவிட்டால், இருக்கிற மொழியும் இறந்துவிடும்.

நமது தமிழ்க்கல்வி முறையைக் குறியீட்டு அரசியல் தத்துவத்தைக் கொண்டு மறுபரிசீலனை செய்யவேண்டும். வெளிநாட்டில் வாழும் தமிழர்களிடம், மொழியை மட்டும் நாம் கற்பிக்க முனைந்தால் தோல்வி ஏற்படலாம். வரலாற்றுக் கற்பிதங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நமது பூர்வீக நிலங்களில் தமிழ் கற்பிக்கப்பட்டாலும், வரலாற்றுக் கற்பிதங்கள் சிறப்பாகக் கற்பிக்கப் படுவதில்லை. இதனால் தமிழ் ஒரு தாழ்வான மொழியாகக் கருதப்பட்டு, தமிழ் மொழியும், தமிழ் வழிக் கல்வியும் அழிந்து வருகிறது. நாம் உணர்வுகளைக் கண்டுகொள்ளாமல், பகுத்தறிவு முறைகளால் தமிழை வளர்க்க நினைப்பதுதான் நாம் செய்யும் பிழை. தமிழையும், தமிழ்வழிக் கல்வியையும், வரலாற்றுக் கற்பிதங்களால் மீட்க முடியும் என்பதை உணரவேண்டும். தமிழ்க்கல்வி என்பது வரலாற்றுக் கற்பிதங்களுடன் சேர்த்து கற்பிக்கப்பட வேண்டும்

நாம் விரும்பும் ஒரு நல்ல சமூகத்தை அடையும் முயற்சியில் நீண்டகாலமாக மதங்களிடமும், சாதிகளிடமும் தோற்றுக் கொண்டிருக்கிறோம். இந்தத் தோல்விக்குக் காரணம் சாதிமத அமைப்புகள் புத்திசாலியானவை என்பதோ அல்லது நாம் முட்டாள்கள் என்பதோ அல்ல. ஒரு சிங்கத்திற்கு எந்த பகுத்தறிவும் இல்லை. ஆனால், நம்மை கொல்லும் சக்தி வாய்ந்தது. அவை இயற்கையில் குருட்டுத்தனமாக பரிணாமத்தால் உருவானவை. அதை அடக்க நாம் ஒரு குழுவை ஒழுங்குபடுத்தி, தேவையான ஆயுதங்களைக் கொண்டு சிங்கத்தை அடக்குகிறோம். மதங்களும் சிங்கத்தைப் போன்றதுதான். அவைகளும் குருட்டுத் தனத்தில் பரிணமித்தன, பகுத்தறிவு கிடையாது. ஆனாலும், நம்மை அழிக்க வல்லது. அதை அடக்குவதற்கும் சிங்கத்தை அடக்குவது போல ஒழுங்குபடுத்தி, அதற்கேற்ற ஆயுதங்களைக் கொண்டு அடக்கவேண்டும். இத்தனை நாளும் நம்மால் அடக்க முடியாததற்கு, நாம் எவ்வாறு ஒழுங்குபடுத்துவது? எது மாதிரியான ஆயுதங்கள் தேவை? என்பதற்கான அறிவு நம்மிடம் இல்லை.

நீண்ட காலமாக பகுத்தறிவுதான் மனிதனை இயக்குகிறது என்ற தவறான கருதுகோள் ஒரு முக்கிய காரணம். "பகுத்தறிவும், உணர்வுகளும் ஒரு சமூகத்தில் ஒரு சமநிலையில் இருக்கவேண்டும். ஏதாவது ஒன்று விஞ்சினால், அது நாட்டிற்கு கேடாய் முடியும்" என்கிறார் பிளேட்டோ. நாம் இதுவரை பகுத்தறிவில் விஞ்சினோம், மதங்கள் உணர்வுகளில் விஞ்சுகின்றன. அதுதான் மதங்களின் பலவீனம். நாம் உணர்வுகளிலும், பகுத்தறிவிலும் ஒரு சமநிலையை அடையும் பொழுதுதான் சாதி மத அரசியல்களை ஒரு கட்டுக்குக் கொண்டுவரமுடியும். நான் மதங்களைக் கட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று கூறுவது, அவற்றை அழிப்பது என்ற பொருளில் அல்ல. மதங்கள் தனிமனிதனைப் பொறுத்தவரையில் பலருக்கும் தேவையாக இருக்கிறது. அதில் நாம் தலையிடத் தேவையில்லை. மதங்கள் அரசியல் சக்தியாக இருப்பதைத்தான் ஒழிக்கவேண்டும். சாதிகள் ஒழிக்கப்பட வேண்டியது.

நாம் இதுவரை பார்த்தது நாம் வெற்றியடையத் தேவையான ஒரு முக்கியமான அறிவு. ஆனால், இதுவே மொத்தமும் அல்ல, போதுமானதும் அல்ல. நாம் தொடர்ந்து நமக்குத் தேவையான அறிவை பெருக்கிக் கொண்டே செல்ல வேண்டும். அறிவில்தான் அனைத்து சிக்கல்களுக்கான தீர்வு உள்ளது.




## அவதானி

ஆசிய நாடுகளில் தமது கால்களைப் பதித்து, யானை விழக்கிய வயலாக மாற்றிய உளவு நிறுவனங்கள், இப்பொழுது ஐரோப்பிய நாடுகளுக்குள் நவீன தொழில்நுட்பத்தின் துணையுடன் நுழைந்துவிட்டன. ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும், ஒன்றுக்கொன்று சமனான பொருளாதர வளம் இல்லா விட்டாலும், அவற்றுக்கிடையிலிருக்கும் பொருளாதார தொழில்துறை சார்ந்த அபிவிருத்தியில் ஒரு வீதத்திலிருந்து, ஐந்து வீதம் வரையிலான ஏற்ற, இறக்கமே இருந்து வருகின்றது. இதுவும் தொடர்ச்சியாக இருப்பதில்லை, சில சந்தர்ப்பங்களில் சமநிலை பொருளாதார தொழில்துறையை எட்டுவதும், பின்னர் இறக்கம் ஏற்படுவதுமாக இருக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளுக்குள் கிட்டத்தட்ட முழுமையாக நுழைந்துவிட்ட உளவு நிறுவனங்கள் எவையென்றால், அவை சீனாவினதும் இந்தியாவினதுந்தான். இந்த இரண்டு நாடுகளுமே ஆசியப் பிராந்திய நாடுகளின் எசமானர்களாகத் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள அனைத்து முயற்சிகளையும் எடுத்து, அதில் படிப்படியாக ஏறுமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தை உருவாக்கிய போது, அவற்றுக்கிடையே நாம் ஐரோப்பியர்கள் என்ற ஒத்த மரபு மனப்போக்கு அதற்குக் காரணமாக அமைந்திருந்தது.

ஐரோப்பியர் என்ற ஒரு இன உறவு நிலைக்கு அவர்களிடம் காணப்பட்ட உணவப் பழக்க வழக்கங்களிலிருந்து பண்பாட்டு, கலை ரீதியாகவும் ஒத்த தன்மை இருந்தன. ஆசியப் பிராந்திய நாடுகளுக்கிடையில், ஒத்த தன்மையாகக் கருதப்படுகையில், அவை யாவும் இந்தியத் தன்மைக்கு உட்பட்டு நிற்பதை அவதானிக்க முடிகின்றது. சீனாவின் தன்மையுடன் ஆசியப் பிராந்திய நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கையில், இந்தியாவின் தன்மையைவிட, மிகக் குறைவாகவே இருக்கின்றது. இந்தியாவுடன் ஒத்துப் போதல், ஒருங்கிணைதல் என்பதற்கு இந்தியாவின் சனநாயகக் கோட்பாடு இலகு வழிவகுப்பதைக் காண முடிகிறது.

ஆனால், சீனா வணிகத்திற்காகவும், தொழில் துறைக்காகவும் தன்னால் ஒழுங்கமைக்கப்பட்ட சீனக் கோட்பாட்டின் சில விதிகளைத் தளர்த்திக் கொண்டாலும், சீன தனது பொதுவுடைமைச் சிந்தாந்த வழி நிற்றலிலிருந்து இம்மிளவும் நகரவே இல்லை. அதனால் ஆசியப் பிராந்திய நாடுகளின் வல்லரசாக எந்த நாட்டைத் தேர்ந்தெடுக்கலாம்? என்று ஆசிய நாடுகளுக்கு ஒரு நிலை வரும் போது, தொண்ணூறு வீதமான நாடுகள் இந்தியாவையே தேர்ந்தெடுப்பார்கள். இந்தியாவின் திட்டமிட்ட இலக்கு என்பது, ஆசியப் பிராந்திய நாடுகளுக்குத் தலைமை தாங்கி, வல்லரசாக இருப்பது மட்டுமல்ல, தனது பொருளாதார, தொழில்துறை, வணிகம், இராணுவம், கல்வி என அனைத்துத் துறைகளிலும் டிஜிற்றல் தொழில் நுட்பத்தைப் புகுத்தி, இந்தியாவை ஒரு அறிவியல் நாடாக மாற்றுவதேயாகும். இந்தியாவின் இஸ்ரோ என்ற விண்வெளி நிறுவனம், நாசா ஆரம்பித்து பல ஆண்டுகளுக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட போதும், அதன் வளர்ச்சி வியக்கத்தக்கதாகவே இருக்கின்றது.

# உளவு நிறுவனங்கள்



இந்தியாவைச் சாதாரண நாடாகக் கருதிவிட முடியாது. மேலைத்தேய விஞ்ஞானிகள் பிரபஞ்ச வெளியையும், கோள்களையும் அறிந்து கண்டுபிடிக்க முன்னரே இந்திய ஆன்மீக மெஞ்ஞானிகள் அவற்றைக் கண்டுபிடித்தவர்கள். அவர்கள் எழுதி வைத்த மருத்துவ, கோள்கள் பற்றிய உண்மைகளை இந்திய மக்கள் உணராத போதும், அவை அலட்சியப்படுத்தப்பட்ட போதும், அதனது முக்கியத்துவத்தை உணர்ந்த ஐரோப்பியரும், அமெரிக்கர்களும் முக்கியத்துவம் இல்லாதவை என்பது போல வெளியே காட்டிக் கொண்டு, அவற்றை தமது நாட்டுக்கு எடுத்துச் சென்று, அங்குள்ள விஞ்ஞானக் கழகங்களிடம் ஒப்படைத்து, அந்தந்த நாடுகளில் உள்ள மருத்துவ விஞ்ஞானமும், வானியல் விஞ்ஞானமும் அவை தமக்குக் கிடைத்த அறிவியல் பொக்கிசம் எனக் கொண்டாடி, அதன் வழி விஞ்ஞான கண்டுபிடிப்புகளைச் செய்து வருகின்றமையை நிராகரிக்க முடியாது.

அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத் துறைக்குச் சமனான அறிவாற்றலும், நுட்பமும் செயல் திறனும் கொண்டதுதான் இந்தியாவின் புலனாய்வுத் துறையான றோ அமைப்பு. இன்று அந்த அமைப்பு ஐரோப்பிய நாடுகளில் தமது இந்திய மக்களை, தொழில்நுட்ப வல்லுனர்களாக, அறிவியல் துறை மாணவர்களாக, வங்கிகளின் அதிகாரிகளாக அனுப்பி வைத்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் இந்தியாவிலிருந்து தாமாக வந்தவர்களில் வளைந்து கொடுக்கக் கூடிய இந்தியர்களை அணுகி, இந்தியாவுக்கு உளவு பார்க்கும்படி இந்திய உளவு நிறுவனம் கேட்கையில், இந்திய தேசிய உணர்வு காரணமாகவும், தமக்கும் அதில் வருவாய் கிடைக்கும் என்பதற்காகவும், அதற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள இந்தியர்களில் உளவு நிறுவனம் யாரையெல்லாம் அணுகினார்களோ, அவர்கள் அதற்குச் சம்மதித்து விடுவார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் வாழுகின்ற இந்தியர்கள், குறிப்பாக இலங்கைத் தமிழர்களுடன் இணக்கப் போக்குக் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் எப்பொழுதும் தம்மை வேறுபடுத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தவார்கள். ஐரோப்பாவின் இன்னும் குறிப்பாக ஜேர்மனியின் பல தொழில் நுட்பங்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரிலிருந்தே களவாடப்பட்டுத்தான் வருகின்றது. இன்று போல் பல ஆண்டுகளுக்கு முன் வகை தொகையாக இந்தியர்கள், ஜேர்மனிக்குத் தொழில் நிமித்தம் வருகை தராவிட்டாலும், அன்று பல தொழில் நுட்பத்துறை அறிஞர்கள், பல்துறை பொறியியலார்கள் என ஆகக் குறைந்தது, நூறு பேராவது ஜேர்மனி எங்கினும் பணி புரிந்திருக்கிறார்கள். அத்துடன் ஜெர்மனியப் பல்கலைக் கழகங்களில் படிக்கவென்றும், பேராசிரியர்களாகவும் பலர் வந்திருக்கிறார்கள்.

ஜேர்மனியக் கல்விக் கட்டமைப்பு என்பது, தனித்தவமானது. ஜேர்மனியில் துறைசார் கல்வி கற்பவருக்கு உலகெங்கும் பெரும் மதிப்பு உண்டு. ஜேர்மனியப் பாரிய இயந்திரங்கள் தொட்டு, வாகன உற்பத்திகள், விமான உற்பத்திகள், அணைகளுக்கான இயந்திரங்கள் என உலகின் பல நாடுகள் ஜேர்மனயிடமிருந்தே வாங்குகின்றன. இந்தியாவில் டாட்டா, பிர்லா உற்பத்தி நிறுவனங்கள் பல்வேறுபட்ட பாரிய தொழில்துறைகளை நடத்தி வருகின்றன. இன்றல்லாத அன்று, அங்கிருந்து பல இயந்திரத்துறை பொறியிலாளர்கள் மேற்கூறிய நிறுவனங்களிலிருந்து தொழில் பயிற்சி எடுப்பதற்காக ஜேர்மனிக்கு வருகை தந்தவர்கள் மூலமாக, அன்றே ஜேர்மனிய தொழில்நுட்ப பற்றன்கள், டாற்றா என்கிற கோட்பாடுகள் களவாடப்பட்டன.

அன்றும் தொழில் நுட்பவியலாளர்கள், பொறியியலாளர்கள் என்று போர்வையில் இந்திய உளவுத்துறையினர் ஜேர்மனிய தொழில்துறைசார் நுட்பங்களை வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல, யாருக்குமே தெரியாமல் யாராலுமே கவனிக்க முடியாதவாறு எடுத்துச் சென்றனர். ஆசியப் பிராந்திய நாடுகளின் தலைமைத்துவத்தைத் தனதாக்கிக் கொள்வதற்காகத் தன்னை அதற்குத் தகுதியாக்கிக் கொள்வதற்காக, இந்தியா அனைத்துத் துறைகளிலும் மிகப் பாரிய வளர்ச்சி அடைந்து வருகின்றது. அத்துடன் இந்தியாவின் இலக்கு இத்துடன் நின்றுவிடாது. இந்தியா உலக வல்லரசாக வருவதற்கான பெரும் திட்டமிடலையும் அது செய்து வைத்திருக்கிறது.

**[தொடரும்]**




சண் தவராஜா

# மக்கள் அரசியல் எதிர் கட்சி அரசியல்

ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்ய சமஸ்டி முறைமையிலான ஒரு தீர்வு தேவை என்ற முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டு 73 வருடங்கள் கடந்து விட்டன. இந்தக் கோரிக்கையை அடியொற்றி தந்தை செல்வா அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி 1949 இல் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதலாக தமிழ் மக்களின் குரலாக - நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் - தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஈழத் தமிழ் மக்களின் சார்பில் பல்வேறு உயர்மட்டப் பேச்சுக்களிலும் கலந்துகொண்ட இந்தக் கட்சி பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்ற இரண்டு ஒப்பந்தங்களிலும் தமிழர் தரப்பாகக் கையொப்பம் இட்டிருந்தது.

1972 இல் இலங்கை குடியரசாக மாற்றம் பெற்றபோது, தமிழ் மக்களின் உரிமைக்கான சட்டப் பாதுகாப்பு அகற்றப்படும் அபாயம் ஏற்பட்ட சூழலில் - அந்த நடவடிக்கைக்கு எதிரான குரலைப் பதிவு செய்யும் விதமாக - தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்த தந்தை செல்வா மக்கள் கருத்தறியும் விதமான ஒரு இடைத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்திருந்தார். பல்வேறு இழுத்தடிப்புகளுக்குப் பின்னர் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் தனது கருத்தை முன்வைத்து, மக்கள் ஆதரவைத் திரட்டி, தேர்தலில் வெற்றிபெற்று, தமிழ் மக்களின் அபிலாசையை உலகறியவும் செய்தார்.

மறுபுறம், பிரிந்து கிடந்த தமிழ்க் கட்சிகளை ஓரணியில் திரட்டி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி பின்னாளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என ஐக்கியத்துக்கான ஒவ்வொரு முயற்சியிலும் தனது பங்களிப்பைச் செலுத்த தமிழரசுக் கட்சி தவறியதில்லை. ஆனால், அண்மைக் காலமாக அந்தக் கட்சியின் போக்கு தொடர்பில் அதிக விமர்சனங்கள் எழுந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. தனித்து இலங்கை தமிழரசுக் கட்சியாகவும், கூட்டாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவும் விமர்சனங்களைச் சந்திக்க வேண்டிய நிலையிலேயே தமிழ் மக்களின் மிகப் பெரிய கட்சி உள்ளது.

இனப் பிரச்சினை தொடர்பாக அழைப்பு விடுக்கப்பட்ட அனைத்துப் பேச்சுக்களிலும் சளைக்காது கலந்து கொண்டு சமாதான சகவாழ்வு தொடர்பில் தமிழ் மக்கள் கொண்டுள்ள அவாவை வெளிப்படுத்தி வரும் இக் கட்சி, அதிகாரப் பகிர்வைக் கோரிக் கொண்டே கிடைத்த வாய்ப்புகளை நழுவ விடும் போக்கைத் தொடர்வதும் தொடர்ச்சியாக அவதானிக்கப் படுகின்றது. முதலாவது வடக்கு மாகாண சபையைப் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் கைப்பற்றிக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தான் இதுவரை கோரிய, தொடர்ந்தும் கோரிக் கொண்டிருக்கின்ற அதிகாரப் பகிர்வின் அம்சங்களை மக்கள் அனுபவிக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டதா? என்ற கேள்விக்கு ஆணித்தரமான பதில் எதுவும் இல்லாத நிலையே உள்ளது. அதே போன்று யாழ்ப்பாண மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்கள் தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயல்பாடுகள் விமர்சனத்துக்கு உரியவையாகவே உள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களானாலும், மாகாண சபை போன்ற அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்புகள் ஆனாலும், அவை மக்களின்

நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்ற சிந்தனை தமிழ்க் கட்சிகள் மத்தியில் இல்லாமல் இருப்பது வேதனைக்குரிய விடயம். பல பத்தாண்டுகள் நடைபெற்ற போர் காரணமாக, தமது வாழ்வாதாரங்களை இழந்து நலிந்த நிலையில் உள்ள மக்களைக் கணக்கில் கொள்ளாது, தமது அரசியல் இருப்பு தொடர்பிலேயே அதிக கரிசனை கொண்டனவாக கட்சிகள் நடந்து கொள்கின்றன. மத்தியில் உள்ள அரசாங்கம், தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்ற விடயம் உலகறிந்த ரகசியமாக உள்ளது. அதேவேளை, குறைந்தளவேயான அதிகாரங்களைக் கொண்டுள்ள போதிலும், அதனைக் கூட மக்களின் நலவாழ்வுக்காகப் பயன்படுத்திக் கொள்ள கட்சிகள் முன்வராத நிலையே நீடிக்கிறது.

தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் மத்தியில் போட்டி நிலவுவது பொதுவான அம்சம். ஆனால், தேர்தல்கள் முடிந்து ஒரு நிர்வாக அலகு உருவாக்கப்பட்டு விட்டால், அதன் தலைமைப் பொறுப்பில் எந்தக் கட்சி இருந்தாலும், அதனோடு ஒத்துழைத்து, மக்கள் நலத் திட்டங்களை முடிந்தளவு செயல்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டியமை ஒரு பொறுப்பாகக் கொள்ளப்பட வேண்டும். தேர்தல் காலப் பகைமையை மனதில் வைத்துக் கொண்டு மக்களுக்கான நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதைத் தடுப்பது, மக்கள் விரோதச் செயற்பாடே அன்றி வேறில்லை.

அது மாத்திரமன்றி, அதிகாரப் பகிர்வைக் கோரிப் போராடும் நாம், அதிகாரப் பகிர்வு கிட்டுமிடத்து அதனை மக்கள் நலன் சார்ந்து, உச்ச பட்சமாகப் பயன்படுத்தும் வல்லமை உள்ளவர்கள் என உலகிற்குக் காட்டுவதற்கான ஒரு அம்சமாகவும், மாகாண சபை மற்றும் உள்ளுராட்சிச் சபை என்பவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால், துர்வாய்ப்பாக அதற்கு மாறான செயற்பாடுகளே இத்தனை காலமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய போக்கு நீடிக்கக் கூடிய ஏதுநிலை உள்ளதாகவே தற்போதைய செயல்பாடுகளும் உள்ளன. வரலாற்றில் இருந்து பாடம் கற்கத் தயாராக இல்லாத தலைவர்களைக் கொண்டுள்ள ஈழத் தமிழ்ச் சமூகம் இந்தப் போக்குகளை மௌனமாக அங்கீகரித்து நிற்கிறது.

மறுபுறம், 2009க்குப் பிந்திய சூழலில் தமிழ் மக்களின் ஒரேயொரு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிதறும் நிலை உருவாகி உள்ளது.



உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பிலான தொழில் நுட்பக் காரணங்களை முன்வைத்தே தனித்துப் போட்டியிடும் முடிவு எடுக்கப்படுவதாக, தமிழரசுக் கட்சி சார்பில் காரணம் கூறப்பட்டாலும், அதற்கும் அப்பாலான தனிப்பட்ட காரணங்கள் உள்ளதாகவே ஐயம் எழுகிறது. குறிப்பாக தங்கள் தமிழரசுக் கட்சி என்ற பலம் பொருந்திய, முறையான கட்சிக் கட்டுமானத்தைக் கொண்ட கட்சியின் முதுகிலேறி ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் பயணிக்கின்றன, விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் தங்கள் கட்சியின் வாக்குகளையும் சேர்த்துக் கொண்டு வெற்றியைச் சுவைத்துக் கொள்கின்றன, தமது கட்சி இல்லாவிட்டால் ஏனைய கட்சிகளால் தனித்து ஒரு ஆசனத்தைக் கூட வெற்றி கொள்ள முடியாது என்ற எண்ணம், தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பலரின் மனதில் உள்ளமை ஒன்றும் ஒளிவு மறைவான விடயம் இல்லை. அத்தோடு, 'இரத்தம் தோய்ந்த கரங்களுடன் கைகோர்ப்பது' தொடர்பில் ஆரம்பம் முதலே அசூசை கொண்ட பலரும் தமிழரசுக் கட்சியில் உள்ளனர் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, தனித்த அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற ரெலோ மற்றும் புளொட் கட்சிகளின் கோரிக்கையை மறுதலிப்பதற்கு விடுதலைப் புலிகளைத் துணைக்கு அழைத்திருக்கின்றது தமிழரசுக் கட்சி. "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனித்த அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு விடுதலைப் புலிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள். எனவே அது அவசியமற்றது" என்ற பாணியில் தமிழரசுக் கட்சியின் கருத்து வெளியாகி உள்ளது.

யதார்த்தத்தில், தமிழரசுக் கட்சியின் இன்றைய மூத்த தலைவர்கள் சீ.வீ.கே. சிவஞானம் தவிர்ந்த யாவரும் விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப் பட்டவர்களே!. மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான தேர்தல்கள் 1982இல் நடத்தப்பட்ட போது விடுதலைப் புலிகள் மாத்திரமன்றி, அன்று களத்தில் இருந்த ஆயுதப் போராட்ட இயக்கங்கள் யாவையும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. பின்னாளில். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரான அ.அமிர்தலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சீ.யோகேஸ்வரன் ஆகியோர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப் பட்டிருந்தனர். மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவரான சீ. சம்பந்தமூர்த்தி, பின்னாளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகி, நாடாளுமன்றம் செல்வதற்கு முன்னரேயே சுட்டுக் கொல்லப்பட்ட, நிமலன் சௌந்தரநாயகம், கிங்ஸ்லி ராஜநாயகம் ஆகியோர் விடுதலைப் புலிகளாலேயே சுட்டுக் கொல்லப் பட்டிருந்தனர். திருமலை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தங்கத்துரை கொல்லப்பட்டதும் விடுதலைப் புலிகளாலேயே!.

இவற்றை வைத்துக் கொண்டு, விடுதலைப் புலிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சி அரசியல் வாதிகளை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை என்ற முடிவுக்கு வர முடியுமா? தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக விடுதலைப் புலிகளைத் துணைக்கழைக்கும் செயல்பாடுகளைத் தமிழரசுக் கட்சி தவிர்த்துக் கொள்வது நல்லது. தவறான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு முன்னெடுக்கப்படும் முயற்சிகள் யாவும், தவறான முடிவுகளை நோக்கியே இட்டுச் செல்லும் என்பதே யதார்த்தம்.

மரணிக்கும் தறுவாயில் தந்தை செல்வா "தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று கூறியிருந்தார். அந்த வாசகம் 47 ஆண்டுகள் கடந்தும், இன்றைய சூழலுக்கும் மிகவும் பொருத்தமாக இருப்பது எத்தகைய வரலாற்று முரண்?



சிறுகதை

சபீனா சோமசுந்தரம்


# மனோகரி

வீட்டைப் பூட்டிவிட்டு கிளம்பினாள்.

**சென்ற மாத தொடர்ச்சி..**

பொடி நடையாக கோவிலுக்கு வந்து சேர, மாலை ஆறு மணியாகிவிட்டது. அப்பொழுது தான் கோவிலில் பூசை முடிந்து, எல்லோரும் வெளியே போய்க் கொண்டிருந்தனர். மனோகரியைக் கண்ட கோவில் பூசகர் “வா மனோகரி.. பூசை இப்பதானடியம்மா முடிஞ்சது..” என்றார். “ஐயா மகள்ட பேருக்கு ஒரு அர்ச்சனை செய்யோனும்..” என்றாள் கம்மிய குரலில் மனோகரி.

பூசகர் பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல், உள்ளே போய் அர்ச்சனை செய்து விபூதியைக் கொண்டு வந்து கொடுத்தார். “மனசில இருக்கிற பாரத்தையெல்லாம் இந்த ஈஸ்வரி பாதத்தில இறக்கி வையடியம்மா.. அவள் எல்லாத்தையும் பாப்பாள்..” என்று மனோகரியிடம் சொல்லிவிட்டு மேல்சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு பையையும் எடுத்துக்கொண்டு அவர் கிளம்பினார். உள்ளே வீற்றிருந்த அந்த ஆதிபராசக்தியைக் கைக் கூப்பி வேண்டிவிட்டு, அங்கிருந்த கோவில் தூணில் சாய்ந்தபடி உட்கார்ந்தாள் மனோகரி. மனதில் பல எண்ணங்கள் வந்து வதைத்தது. மகளின் செல்ல குரலும், பிஞ்சு முகமும் நினைவில் வந்து வந்து மனோகரியைக் கொன்றது. தான் தன் பிள்ளையைச் சரியாக கவனிக்கவில்லையோ? அது தான் அவள் தன்னைவிட்டு போய்விட்டாளோ? என்று தோன்றிது மனோகரிக்கு. “அம்மா வாங்கோவன்.. எனக்கு மூச்சுவிட ஏலாம இருக்கு..” என்று அவள் பிள்ளை கத்திக் கூப்பிடும் சத்தம் கேட்டு, சுயநினைவுக்கு வந்தாள் மனோகரி. அந்தக் குரல், கனவு என்று உணர்ந்தபோது மனோகரிக்குத் தொண்டை அடைத்துக் கொண்டு அழுகை வந்தது. சுற்றிலும் பார்த்தாள். நன்றாக இருண்டு விட்டிருந்தது. அப்போது தான் புரிந்தது நீண்ட நேரமாக தான் கோவிலிலேயே உட்கார்ந்திருப்பது. எழுந்து நடந்தாள் வீடு நோக்கி.



வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்த மனோகரியின் கால்கள் மெல்ல வேகம் குறைந்தது. வீட்டுக்கு போகும் பாதையை விட்டு, பக்கத்தில் தெரிந்த வளைந்த சிறு பாதைக்குள் நடந்தாள். இங்கு தான் அவள் மகள் விழுந்து, இறந்த குளம் இருந்தது. குளத்தை நெருங்க, நெருங்க யாரோ சிலர் கதைக்கும் சத்தம் கேட்டது. நேரம் எப்படியும் இரவு எட்டு மணியைத் தாண்டியிருக்கும். இந்த நேரத்தில் குளத்தடியில் யாருக்கு என்ன வேலை? என்று யோசித்துக் கொண்டு, குளத்தை நெருங்கியவள் திடீரென அங்கு நின்ற பெரிய மரத்தின் பின்னால் ஒளிந்தாள்.

மெல்ல தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள். அங்கு ஒரு டிரக்டர் நிப்பாட்டியிருந்தது. மூன்று பேர் ஆற்றிலிருந்து மணலை அள்ளி டிரக்டரில் நிரப்பிக் கொண்டிருந்தனர். அதற்கு பக்கத்தில் கேசவனும்; ஒரு ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவரும் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். மனோகரி குடும்ப வறுமை காரணமாக, ஒன்பதாம் வகுப்போடு படிப்பை இடைநிறுத்தி விட்டாள். ஆனாலும், அவளுக்கு உலக அறிவு அதிகமாகவே இருந்தது. அங்கு சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடக்கிறது என்பதை புரிந்து கொண்டாள். கேசவனை சும்மாவே மனோகரிக்குப் பிடிக்காது. அவனை பார்த்து “ச்சேச்.. இவனெல்லாம் ஒரு மனுசனெண்டு.. காசு என்டால் என்னவும் செய்வான்.. நாசமாபோனவன்..” என்று மனதிற்க்குள் திட்டினாள்.

அவர்கள் பேசுவது மனோகரிக்கு இப்பொழுது தெளிவாக கேட்டது. “அண்ண கொஞ்ச நாளைக்கு இத நிப்பாட்டுவம்.. அண்டு நான் நல்லா மாட்டியிருப்பன் ஏதோ சமாளிச்சு தப்பிச்சிட்டன்.. உங்களுக்கு தெரியுமண்ண.. இப்ப நாட்டு நிலைமையள் கொஞ்சம் இறுக்கம்.. பிடிபட்டிட்டால் சிக்கலா போயிடும்..” என்றான் கேசவன்.

அதற்கு அந்த வயதானவர் "சரி எங்கள மாட்டிவிட்டுடாதேயும்.. தர வேண்டியத நேரத்துக்கு நேரம் தாறன் தானே.." என்றார் ஒரு வித அதிகாரமும், சலிப்பும் கலந்த குரலில். "அது இல்லயண்ண.. மூண்டு மாசத்துக்கு முதல் தெரியும் தானே.. இஞ்ச ஊருக்குள்ள மாடு மேய்க்கிறவள்ட பெட்ட, இந்தக் கிடங்கிக்க விழுந்து தான் செத்திட்டாள்.. ஆனா அவள் குளத்திக்க தான் விழுந்து செத்தவள் எண்டு, கேஸ மாத்தி எழுத, என்ன பாடு தெரியுமே..? விசயம் வெளிய வந்தா இந்த மணல் அள்ளுற விசயம், அதுக்கு நான் உடந்தை என்டதெல்லாம் வெளிச்சமாயிடும்ஞ் அரசாங்க வேலையுமில்ல.. உழைப்புமில்ல.. ஜெயில்ல தான் மிச்ச வாழ்க்க.. அதான் அண்ண கொஞ்ச நாளைக்கு நிப்பாட்டி வைப்பம்.." என்றான் கேசவன். அவர்கள் பேசிக்கொண்டு வேலையை முடித்து டிரக்டரை ஸ்டார்ட் பண்ணிக்கொண்டு கிளம்பினார்கள்.

"மாடுமேய்க்கிறவள்ட பெட்ட இந்த கிடங்கிக்க விழுந்து தான் செத்தவள்.." இந்த வாக்கியம் மனோகரியின் காதுகளில் இடியென இறங்கியது. கை, காலெல்லாம் விறைத்தது அவளுக்கு. தன் பிள்ளையை இழந்தது விதியே என்று நினைத்துக் கொண்டிருந்தவள், அது பொய் என்று தெரிந்தபோது அவளால் தாங்க முடியவில்லை. "இந்த நாயின்ட காசு ஆசைக்கு என்ட பிள்ள பலியாகிட்டாளே.." என்று மனம் கொதித்தது. அன்று செத்தவீட்டில் சிலர் "இந்த குளம் முன்னுக்கு அவ்வளவு ஆழம் இல்லையே.. பிள்ள என்னெண்டு அதுக்குள்ள மூச்சு திணறினவள்.." என்று பேசிக்கொண்டது மனோகரிக்கு நினைவு வந்தது. உண்மைதான் அந்தக் குளம் நடுவில் தான் ஆழம் அதிகம். கரையில் நின்று யாரும் தவறி விழுந்தால் எழுந்து வந்து விடலாம். ஆனால் மணல் அகழ்வதால் குளத்தின் ஒரு பகுதியில் ஆழமான குழி உருவாகியிருந்தது. சாதாரணமாக அங்கு ஆற்றுக்குள் பெரிய பள்ளம் உருவாகியிருப்பது தெரியாது. யாரேனும் கால் வைத்துப் பார்த்தால் தான் ஆழம் தெரியும். அதில் தான் அன்று மனோகரியின் மகள் தவறி விழுந்து விட்டாள். மனோகரிக்கு எல்லாம் புரிந்தது. கணப்பொழுதில் மனதைத் திடப்படுத்தினாள். மரத்தின் பின்னாலிருந்து ஆவேசமான கண்களுடன் வெளியே வந்தாள் மனோகரி.

"கொஞ்ச நாளைக்கு இதெல்லாம் நிப்பாட்டிட்டு சிவனேண்டு வீட்ட இருக்கோணும்.." என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு யாரும் அவ்விடத்தில் இல்லையே என்பதை சுற்றும், முற்றும் பார்த்து உறுதி செய்து கொண்டு திரும்பிவன், திடுக்கிட்டு பேறைந்தவன் போல நின்றான். எதிரில் மனோகரி நின்றாள். சட்டென தன்னை சமாளித்துக்கொண்டு, குரலை உயர்த்தி "என்ன மனோகரி இந்த நேரத்தில இஞ்சால பக்கம் வந்திருக்கிற.." என்றான் கேசவன். "ஏன்டா என்ர பிள்ளையக் கொன்ட.." என்று ஆவசமாக கத்திக் கொண்டு பாய்ந்து, அவன் சட்டையைப் பிடித்து உலுப்பினாள் மனோகரி. அவளைத் தள்ளி விட்டு, சட்டையைச் சரி செய்து கொண்டு "ஏய் மாட்டுக்காரி உனக்கென்ன விசரா..? என்ன அலம்புற.." என்றான் அவன். "ஓமடா நான் விசரி தான்.. என்ட பிள்ளைய சாகக் குடுத்திட்டு நிக்கிற நான் விசரி தான்.." என்று கத்தினாள் அவள்.

அவளுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது என்பது கேசவனுக்குப் புரிந்தது. பெண்களை எப்போதும் அடாவடியாக இல்லாமல், அன்பாக அணுகினால் எளிதில் அடக்கி விடலாம் என்ற எண்ணம் கொண்டவன் கேசவன். அந்த எண்ணத்தில் "இஞ்ச பாரு மனோ.. நீ எவ்வளவு வடிவான பெட்ட தெரியுமா..? எனக்கு உன்ன ரொம்பப் பிடிக்கும்.. நீ தான் என்ன கண்டுகிறதே இல்ல.. நான் நல்லா உழைக்கிறன்.. நான் சொல்லுறபடி நீ கேட்டா.. நல்லா இருக்கலாம்.." என்றான் கனிவான குரலில். சொல்லிவிட்டு மனோகரியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். "இடுப்பில் சொருகி வைத்திருந்த சிறிய பையை எடுத்து திறந்து, அதற்குள் இருந்த சில ரூபாய் நோட்டுகளை எடுத்து, சேகவனின் முகத்தில் வீசினாள். "இந்தா காசு.. நான் ஆடு, மாடு மேச்சு சேத்த காசு.. என்ட பிள்ளைக்குப் பட்டுப்பாவடை வாங்க வச்சிருந்தன்.. சரஸ்வதி பூசைக்குப் பட்டுப் பாவடை வாங்கி தாங்க அம்மா என்டு கேட்டவள்.. இதயும் எடுத்து உன்ர பொக்கற்ல வையடா விசரா.." என்று கத்தினாள்.

எவ்வளவு கத்தியும், அவனை திட்டியும் அந்த தாய் மனம் ஆறவில்லை. இனி பேசவோ இல்லை, வாழவோ தனக்கு எந்த அவசியமுமில்லை என்று தோன்றியது மனோகரிக்கு. சேலையைத் தூக்கி இடையில் செருகிக் கொண்டு, சேகவன் மீது பாய்ந்து, அவனைக் குளத்தில் தள்ளினாள் மனோகரி. அவள் கத்திக் கூச்சலிட்டு விட்டு, ஓய்ந்து விடுவாள் என்று நினைத்துக் கொண்டு நின்ற கேசவன், அதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தடுமாறி குளத்தில் விழுந்தான். விழுந்தவனை ஆவேசமாய் நீரில் அமிழ்த்தினாள் மனோகரி. கட்டுக்கடங்காமல் ஓடும் ஆடு, மாடுகளைக் கயிற்றை போட்டு, கட்டி இழுத்துக் கட்டுப்படுத்தி, மரத்துப்போன மனோகரியின் வலிய கரங்களைக் கேசவனால் சமாளிக்க முடியவில்லை. பேச முடியாமல் மூச்சு திணறினான். மனோகரியின் கண்கள் நெருப்பென சிவந்து, கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. சில கனங்கள் தான் தண்ணீரில் இருந்து குபுகுபுவென

நீர்க்குமிழிகள் வந்தன. கேசவனை தண்ணீரில் இருந்து வெளியே இழுந்து குளத்தின் நடுப்பக்கமாக போட்டாள்.

தன் சேலையைக் கழற்றி குளக்கரையில் கிடந்த ஒரு பெரிய கல்லைச் சுற்றி கட்டனாள். அந்தக் கல்லை மண் அகழ்வினால் ஏற்பட்ட பெரிய குழிக்குள் தள்ளினாள். மனம் ஏதோ நிம்மதியடைந்த போல் உணர்ந்தாள் மனோகரி. மகளின் பிஞ்சுக்குரல், அவள் காதுகளில் கேட்டுக்கொண்டே இருந்தது. ஒரு விரக்தி சிரிப்போடு, பெருமூச்சு விட்டபடி குளத்தில் இறங்கி நடக்கத் தொடங்கினாள் மனோகரி.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பாடசாலை விடுமுறை. குளத்துக்கு பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் ஒருவன் "அங்க பாருங்க குளத்துக்க ஏதோ மிதக்குது.." என்று கூச்சலிட்டான். ஊருக்குள் ஓடி போய் சொல்லவும், பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, கொஞ்ச நேரத்தில் குளக்கரையில் பெரிய கூட்டம் கூடிவிட்டது. பொலிஸ் அதிகாரி இருவரை குளத்தில் இறங்கி மிதப்பது என்னவென்று பார்க்க அனுப்பினார். சென்று பார்த்தவர்கள் "சேர் ரெண்டு பொடி கிடக்கிது.." என்று சத்தமிட்டனர். சடலங்கள் கரைக்குக் கொண்டு வரப்பட்டன. "சேர் இவர் எங்கட ஏரியா ஜீ.எஸ்.. இவள் மாட்டுக்காரி மனோ.." என்றான் ஒருவன். "இது என்னடா புதினமாக் கிடக்கிது.. இதுகள் எப்பிடி இஞ்ச செத்துக் கிடக்கிதுகள்.." என்றாள் ஒரு வயதான பெண். சடலங்கள் அம்பியூலன்ஸ் வண்டியில் ஏற்றப்பட்டு, பிரேதப் பரிசோதனைக்காகப் பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

கூட்டம் மெதுவாகக் கலைந்தது. அந்த இடத்தை ஆராய்ந்து கொண்டு நின்ற பொலிஸ் அதிகாரியின் கண்களில், சிவப்பு நிறத்தில் ஏதோ மிதப்பது போல தென்பட, ஒருவரை உள்ளே இறங்கி பார்க்கும்படி அனுப்பினார். குளத்தில் இறங்க போனவன், சட்டென உள்ளே விழுந்தான். விழுந்தவன் மூச்சுவாங்க தண்ணீருக்குள் இருந்து எழும்பி "சேர் இவடம் பெரிய கிடங்கா கிடக்கு.. ஆழமா இருக்கு சேர்.." என்றவன் சிவப்பு நிறத்தில் தெரிந்த துணியை பிடித்து இழுத்தான். "சேர் பொம்பிளட சாறி சேர் இது.." என்று சொல்லி அதை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். பொலிஸ் அதிகாரிக்கு, அந்த இடத்தில் ஏதோ தவறு நடப்பது புரிந்தது.

அந்தக் குளம் இருந்த பகுதியைப் பாதுகாப்பற்ற பகுதியாக அறிவித்து, பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு மக்கள் நடமாட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டது. விசாரணையில் அங்கு மணல் அகழ்வில் ஈடுபட்ட கும்பல் கைது செய்யப்பட்டனர். அந்த சட்டவிரோத செயலுக்கு அனுமதி வழங்கிய அதிகாரி, உயிரோடு இல்லை என்பதால், சம்மந்தப்பட்ட ஏனைவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஊருக்குள் பலர் பல விதமாக பேசினார்கள். "உவள் மனோக்கு அவனோட தொடர்பு இருந்திருக்கு..". "அதில தான் பிள்ளைய கவனிக்காம திரிஞ்சிருக்கிறாள்.." என்றெல்லாம் நரம்பில்லா நாக்குகள் பேசின. கேசவனின் மனைவி "என்ட புருசன்ட மனசக் கெடுத்து, என்ட வாழ்க்கைய நாசமாக்கிட்டாள்.. நீ நரகத்துக்குதான் போவயடி மாட்டுக்காரி.. சரியான விசரி.." என்று மனோகரியை ஆத்திரம் தீர திட்டித் தீர்த்தாள்.

மனோகரியின் உடலை பொறுப்பேற்க யாரும் வராததால் அந்த ஊரில் பல செயற்திட்டங்களைச் செய்து கொண்டிருந்த ஒரு பெண்கள் அமைப்பு, அவள் சடலத்தைப் பொறுப்பெடுத்து, அடக்கம் பண்ணினார்கள். சரியோ, தவறோ இங்கு நடப்பது இவர்கள் பேசுவது எதுவுமே மனோகரியின் காதில் விழுவில்லை. அவள் ஆத்மா அவளின் செல்ல மகளைத் தேடிப் போய்க் கொண்டிருந்தது.

**முற்றும்..**




சர்மிலா வினோதினி

# ஆனைவிழுந்தான்

## அறியப்படாத பக்கங்கள்

வடக்கு நிலத்திற்கே உரிய கொளுத்தும் வெய்யில், கூடவே தூசும் புழுதியும். ஆனாலும் அவற்றோடு போராடிப் போராடி வாழ்வதற்குப் பழகிக் கொண்ட மக்கள். நாங்கள் இப்போது கிளிநொச்சியின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஆனைவிழுந்தான்குளம் கிராமத்தை நோக்கிப் பயணப்பட வேண்டும். யாழ் மன்னாரை இணைக்கும் ஏ32 வீதி ஊடாக தொடங்கியது பயணம். நாவற்குழி, தனங்கிளப்பு அப்படியே பூநகரியைக் கடந்து ஜெயபுரம் சந்திக்கு வந்தால் ஜெயபுரத்தினூடாக வன்னேரிக்குளம், அங்கிருந்து சுமார் இரண்டு மூன்று கிலோ மீற்றர்கள் தூரத்தில் அமைந்திருக்கிறது இந்த ஆனைவிழுந்தான்குளம் என்னும் அங்கய்யிற் கிராமம்.

இந்தப் பெயரின்மீது எனக்கு ஒரு மயக்கம், சரித்திர காலத்தில் குறிப்பாக மேலைத்தேயர்களின் காலத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் உட்பட்ட வன்னிக்காடுகளில் இருந்து பிடித்து வரப்பட்ட யானைகள் நெடுந்தீவு, ஊர்காவற்துறை போன்ற பிரதேசங்களுக்கு அழைத்து வரப்பட்டு, அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இப்படி அழைத்து வரப்பட்ட யானை ஒன்று நாவற்குழிக்கு அருகில் கால் தடக்கி விழுந்துவிட, அந்தப் பகுதி "ஆனைவிழுந்தான் ஆழி" என்று அழைக்கப்படலாயிற்று. பின்னர் அது மருவி "ஆனைவிழுந்தான் பாழி" என்று இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது. இப்படியான கதைகள் ஏதும் இந்த ஆனைவிழுந்தான் குளத்திலும் இருக்குமோ என்று துருவத் தொடங்கினேன், பலன் கிடைத்தது.

மன்னராட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட 'கட்டளை' அதாவது 'ஆணை' பூ நகரியிலுள்ள பல்லவராசனின் மனைக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து இவ்வழியூடாக அடுத்துள்ள கோட்டைக் கட்டிய குளம் என்கின்ற குறுநில மன்னனின் இராசதானிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அவ்வேளை கொண்டு வரப்பட்ட அந்த ஆணை, இப்பகுதியில் தவறி விழுந்ததாகவும், அதன் காரணமாகவே 'ஆணைவிழுந்தான் குளம்' என்று அழைக்கப்பட்டதாகவும், பின்னர் அக்காரண இடுகுறிப்பெயர் மருவி, ஆணை என்பது ஆனையாக மாற்றம் பெற்றதாகவும் சொல்கிறார்கள், இந்த நிலத்தின் மூத்த குடிகள்.

சரி, இப்போது இந்தக் கிராமப் பெயரின் ஈற்றிலுள்ள குளத்திற்கு வருவோம். கிராமத்தின் எல்லையில் காட்டை அண்டி அமைக்கப்பட்டிருக்கிறது குளம். பாலையும், வீரையும் முதிர்மரங்களாக இருக்க, இடையிடையே பற்றைகளையும் கொண்டிருக்கிற காடுகளைக் கடந்து நடக்கிறபோது, சீரிய அணையோடு நீண்டிருக்கிறது குளம். பின்காலை வெய்யில் சுள்ளென்று எரிக்க, நிதானமாக குளக்கட்டில் ஏறிநின்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்த்தேன். குளத்தின் உள்ளே ஆங்காங்கு தெரிகிற மரங்களையும், பற்றைகளையும் மீறி காட்டுக் கம்புகள் நிரையாக அவை வேலிகள் குறுக்கும், நெடுக்குமாக குளத்தினுள்ளே தென்பட்டது. ஆச்சரியம் மேலிட



அதென்ன வேலிகள்? என்றேன் கூட வந்த கிராமத்தின் பிரதிநிதிகளிடம்.

மழையற்ற கோடை காலத்தில், குளத்தின் நீர் மட்டம் குறைந்து, குளத்தின் தாழ்ந்த பகுதிக்கு சென்றுவிடுமாம். ஆக நீர் வற்றியபின் எஞ்சியிருக்கிற குளப்பகுதியினுள் மரக்கறி பயிர்ச் செய்கையில் ஈடுபடுவார்களாம் பிரதேசவாசிகள். குளம் வற்றுகிறபோது கிடைக்கிற களிமண் அவ்வளவு போசனைப் பதார்த்தங்களைக் கொண்டிருக்கும். பாடப் புத்தகங்களில் நாங்கள்கற்றவற்றை அனுபவமாக்கி, வாழ்பவர்கள் அவர்கள்.

'அப்போ யானை?' இது நான்.

'யானைகள் கூட்டமா வெளிக்கிட்டு வரும், கலைக்கிறதுதானம்மா' என்றார் அங்கிருந்த பெரியவர்.

குளக்கட்டின் மீதிருந்த யானை இலத்தி காய்ந்திருந்தது. அனேகமாக அது இரண்டு நாட்களுக்குட்பட்டதுதான், சந்தேகமே இல்லை. நீங்க இங்க இருந்து மூன்று மணிக்கு முதல் போயிரோணும், பின்னேரம் யானை வரும், அவர் சைவல்லிக் கொண்டிருக்க, இன்னும் ஒரு வயதான பெண்மணி கதைக்குத் துணையாகினார். அவருடைய மதியச் சமையலுக்கென வாங்கி வந்திருந்த சிறிய முரல் மீன் பை இப்போது பூவரசம் வேலியில் சொருகப் பட்டிருந்தது. நான் அந்தப் பையைப் பார்த்தேன். அது கிடக்கட்டும், இதுதான் முக்கியம், நான் சொல்லுறன் என்றபடி கண்களை விரித்தும், கைகளை ஆட்டியும் விளக்கம் சொல்லத் தொடங்கினார். இப்போது என் கால்கள் அந்தப் புழுதியில் ஆழப் புதைந்திருந்தன.

"ஏம்மா, முன்ன இருந்த பெரியவங்களுக்கு எங்க விரட்டினா? யானை எங்க போகும்? எண்டு நல்லாவே தெரியும்.



அதுகளுக்கும் வயசு போச்சு, இப்ப இருக்கிற பொடியளுக்கு அதெல்லாம் தெரியாது. அவங்க கலைக்க சிலவேளை ஊருக்க வந்திரும்மா? உங்க பாருங்க உந்த தென்னை எல்லாம் பட்டிருக்கிற பாட்ட. இரா முழுக்க நடுங்கிக்கிட்டே கண்ணு முழிச்சிருந்தனம்மா" ஆர்வமாக முன்வந்து கதை சொல்லத் தொடங்கிய வயதான பெண்ணிடம், கூர்ந்து கதைக் கேட்கத்தொடங்கினேன்.

வலிகள் நிறைந்த வாழ்வியல் பயணம். தன் நினைவுகளின் அடுக்குகளில் சேமித்து வைத்திருந்த கதைகளை மேலெடுத்து மீட்டியபடி சொல்லத் தொடங்கினார், நான் கேட்டுக்கொண்டிருந்தேன்.

அவர்களின் பூர்வீகம் தமிழ்நாடு, ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் தேயிலைக் காடுகளிலும், இறப்பர்மரத் தோட்டங்களிலும் வேலை செய்வதற்கென்று அழைத்து வரப்பட்ட மூதாதைகளின் சந்ததிகள் அவர்கள். தெற்கின் காலியில் "அல்பிட்டிய" என்கிற பகுதியில் குடியேற்றப்பட்டவர்கள். பல தசாப்தங்கள் தாண்டிய காத்திருப்பின் பின்னர், இலங்கை அடையாள அட்டையில் தங்களுடைய பெயர்களையும் பதிவு செய்து, வாழத்தொடங்கிய அவர்களை காலமும் விட்டுவைக்கவில்லை.

**(தொடரும்)**



**தயாபாரன், இலங்கை**

# வடக்கிற்கு தொடரும் சீன விஜயம் இந்தியா மீது குறியா?






தமிழர்கள் இந்தியாவிற்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதை கண்டு, சீனா அநாவசியமாக அஞ்ச வேண்டியதில்லை என்று, தமிழர் தரப்பு ஒன்று சீனாவிற்கு தெரிவித்துள்ளது. ஈழத்தமிழர்கள், இந்தியாவின் கலாச்சாரத்தை ஒத்தவர்கள் என்பதனால், தாங்கள் இந்தியாவை நாடி நிற்பதால், அது தொடர்பில் சீனா அஞ்ச வேண்டியத் தேவை கிடையாது என, சீனத் துணைத் தூதுவரிடம் யாழ்ப்பாணம் பிரதிநிதிகள் எடுத்துரைத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கு 28ஆம் திகதி மாலை வந்த சீனாவின் துணைத் தூதுவரை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆறு பேர் ஓர் விடுதியில் சந்தித்தனர். இதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர். இதேநேரம் போரின்போது பாதிக்கப்பட்ட தரப்புடன் அன்றி, பாதிப்பை ஏற்படுத்திய தரப்புடனேயே சீனா நின்றமை வருத்தமளிக்கின்றது என்றும், சீனக் குழுவை சந்தித்தவர்கள் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரின்போது, சீனா மட்டுமல்ல இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் அரசிற்கு உதவியமையும், எமக்குத் தெரியும். ஆனால், அவர்கள் தற்போதேனும் மாற்றிக் கொண்டாலும், சீனா இன்றுவரை அதனை மாற்றவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ தயார் இல்லை என்பதுதான் தமிழர்களின் கவலை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். சீனாவிற்கும், இலங்கைக்குமான உறவு என்பது, அரசிற்கு அரசு என்பதாகவே இருக்கும் என்பதே சீனத்தரப்பு தொடர்ந்தும் வலியுறுத்துகின்றது எனத் தெரிவித்துள்ளனர். அதன்போது இலங்கை வாழ் மக்களிற்கு தம்மாலான உதவிகளை அரசினூடாக தாங்கள் செய்து வருவதாகவும், சீனாவின் துணைத் தூதர் சுட்டிக்காட்டியதாக அறிய முடிகிறது.

எனினும், தற்போது இலங்கை அரசிற்கும், தமிழர் தரப்பிற்கும் இடையில் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் நோக்கில் பேச்சுவார்த்தை ஏற்பாடுகள் வேகமாக இடம்பெறுகின்ற சூழலில், அந்தப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்க வேண்டும் என்றாவது ஓர் அறிக்கையை சீனாவால் வெளியிட முடியுமா? எனக் கேட்டபோதும், சீன அதிகாரிகள் மறுத்து விட்டனர் என அந்தக் கலந்துரையாடலில் பங்குபெற்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மூத்த நிர்வாக அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை வடக்கிலே இயங்கும் பல ஊடகங்கள் பக்கச் சார்பான அல்லது சில தவறான புரிதலுடன் செய்திகளை வெளியிடுகின்றனர் என்ற கவலையை, சீன அதிகாரி வெளியிட்டபோது, தெல்லிப்பளையைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர், அது தவறானது என்றும், மக்கள் சார்ந்த விடயங்களை ஊடகங்கள் தமக்குரிய நெறிமுறைகளின்படி வெளியிடுவதாகவும் கூறியுள்ளார். எனினும் வெளியாகும் செய்திகள் தவறாகவோ அல்லது உண்மைக்குப்

புறம்பாகவோ இருப்பதாகக் கருதினால் அல்லது அறியப்பட்டால், அதனுடன் தூதரகம் சுட்டிக்காட்டும் சமயம் வெளியான செய்திக்கு வழங்கிய அதே முக்கியத்துவம் வழங்கப்பட்டு, சீனத் தூதரகம் அனுப்பும் செய்தியும் உரிய கவனம் அளிக்கப்பட்டு வெளியிடப்படும். ஆனால், இன்றுவரை தூதரகம் அவ்வாறான அறிக்கை ஏதும் அனுப்பவில்லை என்று வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு தூதரகம் மறுப்பு அறிக்கை அனுப்பியும், ஊடகம் அதனை வெளியிடாத சந்தர்ப்பத்திலேயே தூதரகம் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்க முடியும். அதுவரை இதனைக் கருத்தாக கொள்ளமுடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

வடக்கிற்கு இரு நாள் பயணமாக வருகை தந்த சீனக் குழுவினர், மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கு கொண்டிருந்தனர். முதலில் மன்னார் பகுதிக்குப் பயணித்த அவர்கள், அங்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் 300 குடும்பங்களிற்கான வாழ்வாதார உதவியை வழங்கி வைத்தனர். நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் நிலையில், தமிழர் தாயகப் பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு, சிலருக்கு மட்டுமே உதவிகளை வழங்கியுள்ளது பல கேள்விகளை எழுப்புகிறது என்று, தமிழர் தரப்பு சிவில் சமூகத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் சீனக் குழுவுடன், மன்னாரில் மதிய உணவுடன் கூடிய ஓர் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அதன் பிறகு மன்னார் மாதோட்டப் பகுதியில் ராஜமகா விகாரையில் குடிநீர்த் தாங்கி அமைக்க, அத்திவாரம் இடும் நிகழ்வு விகாராதிபதியின் ஏற்பாட்டில் இடம் பெற்றது. இந்த நிகழ்வின் போதும் 150 குடும்பங்களிற்கு உதவிப்பொதி வழங்கப் பட்டது. அதில் அதிகமாக பெரும்பான்மை இன மக்களே கலந்துகொண்டனர். சீனக் குழுவினரின் உதவியளிக்கும் நிகழ்ச்சி, திட்டமிட்ட வகையில் விளம்பரப்படுத்தப் பட்டது என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.

மன்னார் நிகழ்வுகளையடுத்து, யாழ்ப்பாணத்திற்குப் பயணித்த சீனக் குழுவினர், யாழ்ப்பாணம் கோட்டைக்குப் பயணித்து, அதைப் பார்வையிட்டனர். இதனையடுத்து இரவு உணவுடன் யாழ் விடுதியில் ஓர் சந்திப்பும் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே முன்னர் கூறிய கருத்துகளும் பரிமாறப்பட்டன. 29ஆம் திகதியும் சீன தூதரக அதிகாரிகள் குடாநாட்டிலே பல நிகழ்வுகளில் பங்குகொண்டிருந்தனர்.

இலங்கையில் போரின் பின்னர் பல நாடுகள் தமது ஆளுமை மற்றும் ஆதிக்கத்தைச்






செலுத்த முயல்வதைக் காண முடிகிறது. அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கில் ஆதிக்கத்திற்காக இந்தியாவும், சீனாவும் போட்டிப் போட்டு நன்கொடைகளை இறைக்க முயல்கின்றனர். இரு நாடுகளுமே குறிப்பாக மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் தமது பிடியை இறுக்க முயன்றாலும், யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் இந்தியாவின் ஆதிக்கம் பலமாகவுள்ளதோடு, தற்போதைக்கு அதனை பலவீனப்படுத்த சீனாவால் முடியவில்லை. ஆனாலும், அந்தப் பிடியைத் தளர்த்த அல்லது தகர்க்க சீனா கையாலும் உத்திக்கு, இந்தியாவால் ஈடுகொடுக்க முடியுமா? என்கின்ற கேள்வியும் தற்போது எழுகிறது. சீனாவின் முன்னெடுப்பைத் தடுக்கும் வகையிலோ அல்லது அதற்கு ஈடு கொடுக்கவோ இந்தியா வடக்கில் மேலும் அதிக உத்திகளையும், முயற்சியினையும் கையாலும் என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் அவர்களின் நடவடிக்கையே இந்த விடயத்தில் வெற்றியைத் தீர்மானிக்கும்.

இதேநேரம் மன்னார் மாவட்டத்தின் நிலைமை வேறாகவுள்ளது. அங்கே சீனாவின் பிடி அல்லது தந்திரம் மேலோங்கவும் வாய்ப்பு காணப்படுகின்றது. இதனை இந்தியாவும் உணர்ந்திருக்கலாம். இதனால் இராஜதந்திர நெருக்கடிகள் அதிகரிக்கலாம் என்றே கருதப்படுகின்றது. யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதிக்குச் சென்ற சீன துணைத் தூதுவர், அதையும் சுற்றியுள்ள பகுதிகளையும் படமாக்கி, தமது டிவிட்டரில் பதிவேற்றியுள்ள இரு படங்களில் யாழிலே இந்திய நிதியில் அமைக்கப்பட்டுள்ள கலாச்சார மண்டபத்தை குறிவைத்துள்ளமையும் புலனாகின்றது.

சீனா வடக்கே காத்திரமாகக் காலூன்ற காய்களை நகர்த்தினாலும், தாங்கள் கலாச்சாரத்தையோ, மதத்தையோ அன்றி நட்பையே வளர்க்க விரும்புவதாக யாழ் மாவட்டச் செயலகத்தில் உலருணவுப் பொதி வழங்கும் போது, சீன உதவித் தூதுவர் உரையாற்றியதும் கவனிக்கத்தக்கது. அதுமட்டுமின்றி வடக்கு, கிழக்குப் பகுதிகளிற்கு இந்தியத் தூதரக அதிகாரிகள் விஜயம் செய்வதைவிட, சீனத் தூதரக அதிகாரிகள் கூடுதலாகத் தொடர்ந்து பயணிக்கின்றனர் என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். சீனவிற்கு அப்பாற்பட்டு பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளும், அண்மைய காலத்தில் வடக்கிற்கான விஜயத்தை அதிகரித்துள்ளனர். சீனா மற்றும் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள், கடலிற்கும் இறங்கிக் குறிப்பிட்ட தூரம் பயணித்துள்ளனர் என்பதையும் அவதானிக்க முடிகிறது.

அடிக்கடி வடக்கிற்கான விஜயத்தை மேற்கொள்வது, பொதுமக்களிற்கு நேரடியாக உதவிகளை வழங்குவது, அரச அதிகாரிகள் மற்றும் தொண்டு அமைப்புடன் கலந்துரையாடுவது போன்ற நகர்வுகளை சீனா திட்டமிட்டு முன்னெடுக்கிற அதேவேளை, சீனாவின் இப்படியான நகர்வுகளை இந்தியா அவதானித்துள்ளதா? அப்படியென்றால், என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது? அல்லது எடுக்கப் போகிறது? என்று தெரியவில்லை.

மொழி, இன, மத மற்றும் கலாச்சார தொடர்புகளிற்கு அப்பாற்பட்டு ஈழத்தமிழர்களுக்கும், இந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதையும், இந்தியாவின் பாதுகாப்புடன் தமிழர் தாயக பெருநிலப் பரப்புடன் தொடர்பு கொண்டது என்பதை இந்தியா முழுமையாக உணர்ந்துள்ளதா? என்பது தெரியவில்லை. ஆனால், அதை உணர வேண்டும், அதன் அடிப்படையில் செயல்பட வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று பலதரப்பினர் கருதுகின்றனர். இலங்கை தொடர்ச்சியாக கேந்திர ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக மாறி வருகிறது. அதே வேளை ஆசியப் பிராந்தியத்தில் வல்லரசுகளாகத் திகழும் இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையேயான கேந்திர ரீதியான ஆளுமையைப் பரிசோதிக்கும் ஒரு களமாக மாறி வருகிறது. அதில் குறிப்பாகத் தமிழர்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப் படுகிறார்கள் என்பது கசப்பான உண்மை.


Melliyalsarees
மெல்லியள்
சாரிஸ்
மலிவு
விற்பனை
+49 176 24650540
Rheinische Strasse 29
DORTMUND

19 ஆம் ஆண்டில்....

## Radio - by - Phone

# ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

## 00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

**00 49 231 700 977 60**

மேலதிக விபரங்களுக்கு... **www.etr.fm**

மகிழ்வுடன்....

அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music

Smt. வித்யா மயூரன், சுவிஸ்



## 14. சந்த்ரகலா விநியோகஹ

*சந்த்ரே முகேச ப்ராதேஷே தன்மாத்ராகார வஸ்துனி / சிவஸ்ய மகுடே கங்காநத்யாம்ச லகுடேபிச // ஏஷாம் சந்த்ரகலா சைவ விநியோஜ்யா விதீயதே /*

**கருத்து**

| | |
|---|---|
| சந்த்ரே | சந்திரன் |
| முகேச | முகம் |
| ப்ராதேஷே | ஒரு சாண் (பெருவிரலுக்கும் சுட்டிவிரலுக்கும் இடையில் உள்ள வளைவு) |
| தன்மாத்ராகார வஸ்துனி | குறிப்பிட்ட அளவிலுள்ள பொருட்கள் |
| சிவஸ்ய மகுடே | சிவனின் மகுடம் |
| கங்காநத்யாம்ச | கங்காநதி |
| லகுடேபிச | கோடரி |



*ஏஷாம் சந்திரகலா சைவ விநியோஜ்யா விதீயதே*

## 15. பத்மகோச விநியோகஹ

*பலே பில்வகபித்தாதௌ ஸ்திரீனாம்ச குசகும்ப யோஹோ / ஆவர்தே கந்துகே ஸ்தால்யாம் போஜனே புஷ்பகோரகே // ஸஹகார பலே புஷ்பவர்ஷே மஞ்ஜரிகாதிஷு / ஜபாகுஸுமபாவேச கண்டரூபே விதானகே // வல்மீகே கமலே ப்யண்டே பத்மகோஷோ விதீயதே/*

**கருத்து**

| | |
|---|---|
| பலே பில்வகபித்தாதௌ ஸ்திரீனாம்ச | வில்வம், விளா முதலிய பழங்கள் |
| குசகும்பயோஹோ | பெண்ணின் மார்பு |
| ஆவர்தே | சுற்றி வருதல் |
| கந்துகே | பந்து |
| ஸ்தால்யாம் | பாத்திரம் (சாப்பிடும் தட்டு) |
| போஜனே | சாப்பிடுதல் |
| புஷ்பகோரகே | பூ மாலை |
| ஸஹகாரபலே | மாம்பழம் |
| புஷ்பவர்ஷே | பூ மழை |
| மஞ்ஜரிகாதிஷு | பூங்கொத்து |
| ஜபாகுஸும்பாவேச | பூஜைக்குப் பாவிக்கும் மலர் |
| கண்டரூபே | மணி |
| விதானகே | விதானம் |
| வல்மீகே | புற்று (பாம்பு புற்று) |
| கமலே | தாமரை |
| ப்யண்டே | முட்டை |



*பத்மகோஷோ விதீயதே*

# பிரேசில் கேள்விக்குள்ளாகும் ஜனநாயகம்

பூமிபுத்திரன்

பரப்பளவிலும், குடிமக்கள் தொகையிலும் உலகின் ஐந்தாவது பெரிய நாடான பிரேசில் நாட்டின் ஜனநாயகம் கேள்விக்கு இலக்காகி உள்ளது. கடந்த வருடம் அக்டோபர் மாதம் நடைபெற்று முடிந்த அரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற முன்னாள் தொழிற்சங்கவாதியான லூலா டா சில்வா யனவரி 1 இல் பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார். தேர்தல் முடிவை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டிராத முன்னாள் அரசுத் தலைவர் பொல்சனாரோவின் ஆதரவாளர்கள், லூலா பதவியேற்று சரியாக ஒரு வாரத்தில் - யனவரி 8ஆம் திகதி - தலைநகர் பிரேசிலியாவில் ஒன்றுகூடி அரசுத் தலைவர் மாளிகை உள்ளிட்ட முக்கிய கட்டிடங்களைக் கைப்பற்றித் தமது எதிர்ப்பை வெளியிட்டு உள்ளனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற சம்பவங்களை நினைவுப் படுத்தும் வகையில் பிரேசிலியாவில் சம்பவங்கள் நடந்தேறின. அக்டோபர் 30இல் தேர்தல் முடிவுகள் வெளியான நாள் முதலாக - தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்ளாத - பொல்சனாரோவின் ஆதரவாளர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் இராணுவ முகாம்களுக்கு முன்னால் குழுமி, தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். "தேர்தல் முடிவுகள் இரத்துச் செய்யப்பட வேண்டும், இராணுவம் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும், லூலா கைது செய்யப்பட வேண்டும்" என்பவையே அவர்களின் பிரதான கோரிக்கைகளாக உள்ளன. இடதுசாரிக் கொள்கைகளைப் பின்பற்றுபவரான லூலா பிரேசிலை இடதுசாரிப் பாதையில் இட்டுச் சென்று கியூபா மற்றும் வெனிசுவேலா போன்ற நாடுகளின் ஆட்சியைப் போன்று உருவாக்கி விடுவார். கம்யூனிச ஆட்சியைக் கொண்டுவந்து விடுவார் என்ற அச்சத்தை அவர்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

லூலா டா சில்வா இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் அரசுத் தலைவராகப் பதவி வகித்துள்ளார். 2003இல் பதவியைப் பொறுப்பேற்ற அவர் 2010 வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் பிரேசில் நாட்டை கம்யூனிசப் பாதைக்கு இட்டுச் செல்ல எந்தவொரு முயற்சியையும் அவர் மேற்கொள்ளவில்லை. மாறாக, அந்த நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபட்டார். அதில் பெரு வெற்றியும் பெற்றார். தற்போது கூட அவரது ஆட்சி வலதுசாரிகளின் கூட்டணி ஆட்சியாகவே அமைந்துள்ளது. அவரது அமைச்சரவையில் வலதுசாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

இருந்தும் அவர் மீது கம்யூனிச முலாம் பூசும் தீவிர வலதுசாரிகள் அவரைப் பதவியில் இருந்து எப்படியாவது அகற்றிவிடத் துடிக்கிறார்கள். அவர்களுக்கு இராணுவமும், அரச நிர்வாகத்தில் உள்ள தீவிர வலதுசாரிக் கொள்கைகளைக் கொண்டவர்களும் மறைமுக ஆதரவை வழங்கி வருகின்றனர்.

8ஆம் திகதி தலைநகர் பிரேசிலியாவில் நடைபெற்ற வன்முறை ஆர்ப்பாட்டத்தில் நாட்டின் பல



# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

ENESAR N.S.R.
தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும்**
**தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




www.jaffnastores.com
info@jaffnastores.de

Tel. - 0521 174794
Mobile - 01732807906

**Feilenstraße 8**
**33602 Bielefeld**



பகுதிகளிலும் இருந்து வரவழைக்கப்பட்ட ஆயிரக் கணக்கானோர் பங்கு கொண்டுள்ளனர். நூற்றுக்கு மேற்பட்ட பேருந்துகளில் அழைத்து வரப்பட்ட இவர்கள், சுமார் 7 கிலோ மீற்றர் ஊர்வலமாக வருகை தந்தே அரசுத் தலைவர் மாளிகை, நாடாளுமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றக் கட்டடங்களைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தனர். எந்தவொரு இடத்திலும் இவர்களது வருகையைத் தடுக்கும் எந்தவொரு முயற்சியையும் காவல் துறை மேற்கொள்ளவில்லை. மாறாக, அவர்களை ஊக்குவிக்கும் வகையிலேயே காவல் துறையினர் நடந்து கொண்டதை ஊடகங்கள் பதிவு செய்துள்ளன.

அரசுத் தலைவர் லூலாவின் தகவலின் படி, அரசுத் தலைவர் மாளிகைக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்குக் கதவு திறந்து விடப்பட்டுள்ளது. வன்முறை எண்ணத்தோடு அரசுத் தலைவர் மாளிகை உள்ளிட்ட கட்டிடங்களை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வாயில் கதவை உடைக்காமலேயே உள்ளே பிரவேசித்து உள்ளார்கள் எனும்போது, உள்ளே இருந்துவந்த உதவி இல்லாமல் அது சாத்தியமாகி இருக்காது என்பது, அதிகமாக மூளையைக் கசக்காமலேயே புரிந்து கொள்ளப்படக் கூடிய உண்மை.

அதேபோன்று நடைபெற்ற சம்பவங்களின் பின்னணியில் யார் உள்ளார்கள்? என்பதுவும், பெரும் பொருட் செலவிலான இத்தகையத் திட்டத்தைச் செயற்படுத்தும் வல்லமை யாரிடம்? எந்தத் தரப்பிடம் உள்ளது? என்பதுவும் வெளிப்படையாகத் தெரிந்த விடயம். எனினும், தற்போது அமெரிக்காவில் தங்கியுள்ள முன்னாள் அரசுத் தலைவர் பொல்சனாரோ தன்னை நோக்கி முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். ஆனால், தேர்தல் முடிவு முதல் இன்றுவரை, அவர் முன்வைத்து வரும் கருத்துகள், அதனோடு இணைந்த செயற்பாடுகள், பிரேசில் சம்பிரதாயத்துக்கு அமைவாக தனது பதவியை வெற்றி பெற்ற வேட்பாளருக்கு நேரடியாக வழங்குவதை அவர் தவிர்த்துக் கொண்டமை உள்ளிட்ட பல விடயங்கள் அவருக்குப் பாதகமாகவே உள்ளன. இத்தனை விடயங்கள் நடந்த பின்னரும் கூட லூலாவின் தேர்தல் வெற்றியைக் கேள்விக்கு உள்ளாக்கும்




# DORTMUND மாநகரத்திலே
# தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்
# உணவுப்பொருட்களை மொத்தமாக
# பெற்றுக்கொள்ள நாடுங்கள்

StaR-Impex




Rabeena Since 1986 We've Mastered Taste

Aachi The Mother of Good Taste

BTM

Double Horse
Bringing Health to Life

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.

**Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund**
**Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698**

**email : info@star-impex.de**
**web : www.star-impex.net**

TRS ASIA'S FINEST FOODS




MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · AKASH Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · AASHIRVAAD · Pillsbury · PATAK'S Original · Laila

வகையில் அரச அதிகாரி ஒருவர் பேசிய காணொளியைத் தனது சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து உள்ளார். குறித்த காணொளி தொடர்பில் கண்டனங்கள் எழுந்த நிலையில், அது அகற்றப்பட்டு உள்ளது.

பொல்சனாரோவின் பதவிக் காலத்தில் நிகழ்ந்த முறைகேடுகள் தொடர்பில், குறிப்பாக கொரோனாக் கொள்ளை நோய் விவகாரத்தைத் தவறாகக் கையாண்டமை மற்றும் அமேசன் காடுகளில் சுரங்கத் தொழில்களை ஊக்குவித்தமை போன்றவை தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என லூலா தரப்பில் ஏலவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது அரச அலுவலகங்கள் தாக்கப்பட்டமை தொடர்பிலான விசாரணையையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் பொல்சனாரோ உள்ளார். இந்நிலையில், தன் மீதான விசாரணைகளில் இருந்தும், தண்டனையில் இருந்தும் தப்பிக் கொள்வதற்காக அவர் அமெரிக்காவிலோ அன்றி, வேறு ஒரு நாட்டிலோ அரசியல் தஞ்சம் கோருவாரா? என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அதேவேளை, களத்தில் லூலாவின் கரங்கள் பலப்படுத்தப்பட்டு உள்ளதைப் பார்க்க முடிகின்றது. அரசியல் அடிப்படையில் மிகவும் பிளவுண்ட நிலையில் காணப்படும் பிரேசில் சமூகத்தில், மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்திலேயே வெற்றி பெற்ற ஒரு அரசுத் தலைவரின் ஆட்சி, சுமூகமாக நடப்பதற்கான வாய்ப்புகள் குறைவு என்பது தெரிந்ததே!. அதிலும் செனட் சபையில் பொல்சனாரோ ஆதரவுக் கட்சிகளே பெரும்பான்மையைக் கொண்டிருக்கின்றன. பல மாநிலங்களில் ஆளுநர் பதவியும் வலதுசாரிகளின் பிடியிலேயே உள்ளது. இந்நிலையில், யனவரி 8இல் நடைபெற்ற வன்முறைகள் பிரேசில் மக்களின் மனதில் மாற்றத்தைத் தோற்றுவித்துள்ளதை செய்திகள் வாயிலாக அறிய முடிகின்றது. வன்முறைச் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவது, மீண்டும் 60களின் நடுப்பகுதியில் நிலவிய இருண்ட யுகத்துக்கு நாட்டை இட்டுச் சென்று விடுமோ? என்ற அச்சத்தை மக்கள் மனதில் தோற்றுவித்துள்ளது. இந்தச் சிந்தனை லூலா அரசுக்கான ஆதரவாக மாறி வருகின்றது.

என்றாலும், தனது பாதையில் லூலா அதிக தூரம் பயணிக்க வேண்டி உள்ளது. நாட்டின் பொருளாதாரம் ஏற்கனவே மோசமான நிலையில் உள்ளது. மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் பட்டினி நிலைமையை எதிர்நோக்கி உள்ளனர். இந்நிலையில் அரசியல் அடிப்படையிலான தளம்பலான அரசாங்கத்தை வைத்துக் கொண்டு, நாட்டை சுபீட்சப் பாதையில் நடைபோட வைப்பது கடினமே!. ஆனால், அதற்கான அனுபவமும், திறமையும் லூலாவிடம் உள்ளதாகவே தெரிகிறது.




யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி

# Jasmine Silk House



2023ஆம் ஆண்டின்
புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்

**Fester Str.50, 40882 Ratingen**
**Tel : 021 028 447 44**
**Mob. : 0173 1937 325**



எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்






CENTURY
TRAVELS

**Rheinische Str.29-44137-Dortmund**

**0231 58 96 557 | 0231 55 74 319**

www.centurytravels.de    info@centurytravels.de